www.padippakam.com

# பனிமலர்

இதழ் 6 ஜூன் 1992



'சோ'வின் தீர்க்க தரிசனம்

சகாதேவன்



மதராஸில் மழைபெய்தால்

ஈழத்திற் குடை பிடிக்கிறார்கள்

சிவசேகரம்



பெண்களுக்கு வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன

சித்திரலேகா மௌனகுரு



CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro
Danmark

U.K. 90p: FRANCE 9Fr: GERMANY 3DM: SWISS: 3SF: CANADA 2C$: SRI LANKA Rs10: INDIA Rs5

படிப்பகம்

# வாசகர் பக்கம்

மதிப்புக்குரிய 'பனிமலர்' ஆசிரியர் குழுவிற்கு,

தங்களது இதழின் 'ஊரிலும் உலகிலும்' பகுதியில் கொழும்பு இராணுவச் செயலகத்தின் மீதான 'கார்க்குண்டு' பற்றிப் பனிமலரினது கண்ணோட்டத்தில் எழுதியிருந்தீர்கள்.

ராணுவச் செயலகத்தின் மீதான 'கார்க்குண்டு' ஒரு கோரச்செயல் எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். விடுதலைப் போராட்டத்திற்கு ஆயுதப் போராட்டத்தை விட முக்கியமானதொரு பரிமாணமுண்டு என்று குறிப்பிட்டுள்ளீர்கள். அரசியலை ஆணையில் வைப்பது என்கிறதைத் தவிர வேறு பரிமாணமிருப்பின் அதை விளக்கமாகக் குறிப்பிடுவீர்களெனின் நாம் அதுபற்றித் தெளிவடையலாம்.

பெருவாரியான மக்களது நலன்களுக்கெதிரான எதிரிக்கு எதிராக, நன்கு ஆயுதபாணியாக்கப்பட்ட படைகளால் கட்டிக்காக்கும் மக்கள் விரோத பிற்போக்கு அமைப்பு வடிவத்திற்கெதிராக ஆயுத எதிர்ப்பு அரசியலை (புரட்சிகர வன்முறை அரசியலை) எவ்வித சமரசமுமின்றி நிகழ்த்துவதுதான் விடிவைப் பெற்றுத்தரும் என்பது தெளிவு. அதை ஏற்றுக் கொள்வோமெனில் எதிரிகளின் ராணுவத் தலைமையகத்தின் மீதான தாக்குதல் எவ்வகையில் கோரச் செயலாகும்? கோரச் செயல்களற்ற யுத்த நடவடிக்கைகள் எவை என்பது பற்றித் தெளிவு படுத்துவீர்களா?

மேலும், பனிமலர் இதழ் 3ல் விடுதலைப்புலிகள் ராஜீவ் கொலைக்குக் கண்டனம் தெரிவிக்க தவறியமை பற்றிக் குறிப்பிட்டுள்ளீர்கள். ராஜீவ் கொலை அநாகரிக அரசியல் என்றும் காட்டுமிராண்டித்தனமானது என்றும் அதைக் கண்டித்தேயாக வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறியுள்ளீர்கள்.

ராஜீவ் கொலை மட்டுமல்ல, ரஞ்சன் விஜேரத்ன கொலையுட்பட அரசியல் எதிரிகளது கொலைகள் யாவும் நிறுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளீர்கள்.

இக் கட்டுரையின் ஒரு குறிப்பிட்ட பகுதி, ஒரு தனி நபரைக் கொல்வதன்மூலம் பிற்போக்கான மக்கள் விரோத அமைப்பு வடிவத்தை தகர்க்க இயலாது என்பதைக் கூறுவதைவிட ராஜீவ் என்கின்ற மக்கள் எதிரியினது கொலையைக் கண்டிக்க வேண்டும் என்பதற்கே அழுத்தம் கொடுத்துள்ளது. ராஜீவினதும், ரஞ்சன் விஜேரத்னவினதும் கொலை சரியான போராட்ட வடிவமா என்கிறது பற்றி இங்கு நாம் விமர்சனம் எழுதவில்லை. ஆனால், ராஜீவ் என்ற மக்கள் விரோதியினது கொலை காட்டுமிராண்டித்தனமானதா? கண்டிக்கப்படவேண்டியதா? கண்டிக்க மறுப்பது மனிதாபிமானமற்றதா?

மனித நேயம் என்பது பொதுவானதா? ஒடுக்கப்பட்ட மக்கள் திரளுக்கு ஒடுக்குமுறையாளன்மீது நேசம் இருக்க முடியுமா? பொன் மொழி உதிர்த்து, "ஆலமரம் விழுந்தால் நிலம் அதிரத்தானே செய்யும்" என்று கூறி ஒரே நாளில் 4000இற்கு மேற்பட்ட சீக்கிய அப்பாவி மக்களை நரவேட்டையாடி, சீக்கிய பெண்களைக் கற்பழித்து, ஆயிரக்கணக்கான மக்களை நிரந்தர அகதிகளாக உசுப்பிவிட்ட கொலைபாதகன் மீது சீக்கிய சமூகத்திற்கு மனித நேயம் வருமா?

தரகு முதலாளிகள், பெரு முதலாளிகள், நிலப் பிரபுக்கள் நலனுக்காக திறந்த பொருளாதாரக் கொள்கையால் நாட்டை ஏகாதிபத்தியங்களுக்கு தாரை வார்த்துக் கொடுத்ததின் மூலம் கோடிக்கணக்கான இந்திய உழைக்கும் தொழிலாளர், விவசாயிகளை பஞ்சப் பராரிகளாக்கியதன் மூலம், உழைக்கும் வர்க்கத்தின் பிரதான எதிரியாகத் திகழ்பவன், அப் பிற்போக்காளன் மீது உழைக்கும் வர்க்கத்திற்கு ஏது மனித நேயம்?

பல அடக்குமுறைக் கருப்புச் சட்டங்களை கொண்டு வந்து இந்திய நாட்டை பாசிச அபாயத்திற்கு உள்ளாக்கியிருக்கும் ஒரு பாசிஸ்டாக விளக்கியவன்தான் ராஜீவ், முற்போக்காளர்களையும், புரட்சியாளர்களையும் பாசிச கருப்புச் சட்டங்கள்மூலம் வேட்டையாடுபவன் மீது நேயம் கொள்பவர்கள் யார்?

உள்நாட்டில் மட்டுமல்லாது, பிராந்திய ஆதிக்க வெறியுடன் இலங்கைத் தமிழ்மக்களது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை நசுக்கி, போராளிகளை பகடைக் காய்களாகவும், அடிவருடி சமூக விரோதிகளாகவும் சீரழித்து, இலங்கை மண்ணை ஆக்கிரமித்த ஆக்கிரமிப்பாளன் ராஜீவ்.

எமதருமைத் தாய்நாட்டில் ஆக்கிரமிப்புப் படையை கட்டவிழ்த்துவிட்டு கொலை, கொள்ளை, கற்பழிப்பு என அட்டூழியங்களை நிகழ்த்தி 1000ற்கு மேற்பட்ட போராளிகளையும் 6000ற்கு மேற்பட்ட அப்பாவி மக்களையும் கொன்று குவிக்க ஆணையிட்ட எங்கள் எதிரிதான் ராஜீவ் என்ற ஆக்கிரமிப்பாளன். தாய்நாட்டை, எம் மக்களை நேசிக்கும் எவருக்கும் ஆக்கிரமிப்பாளன் அழிவு வருந்தத்தக்கதா?

காஷ்மீர், அஸ்ஸாம், நாகலாந்து ஆகிய வடகிழக்கிந்திய மாநில மக்களை இராணுவத்தின் மூலம் வேட்டையாடி அவர்களது நீதியான ஜனநாயகப் போராட்டங்களைக்கூட இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கும் இந்த மக்கள் எதிரியினது மரணம், அம் மக்களுக்கு கண்டிக்கவோ, வருத்தப்படவோ வேண்டிய ஒன்றா? இல்லை, இல்லவே இல்லை.

தங்களது இதழ் 4ல் வழிப்போக்கன் டயறியில் கூறுவதுபோல், 'ராஜீவ் காந்தி கொலைக்கு யார்தான் கண்ணீர்விடப் போறான், கொழும்பில வெடிகூடக் கொழுத்திக் கொண்டாடினாங்களாம். உப்பிடி ஒரு நாளைக்கில்லை இன்னொருநாள் நடந்துதான் இருக்கும்.' வழிப்போக்கனைக் காட்டுமிராண்டி என்று சொல்லி வழிப்போக்கன் டயறியை நிறுத்திவிடாதீர்கள். பாவம் அந்தாள்த்தான் நாட்டில் மக்களுடன் இருப்பதால் நடைமுறை யதார்த்தமாக உண்மையை எழுதுது.

புரட்சி யுத்தம் என்பது நடைமுறையில் கொடூரமும், அவலமும் நிறைந்த இரத்தம் சிந்தும் அரசியலே, வர்க்க கோபாவேசமும் உணர்ச்சியும் நிறைந்தது. (நடைமுறையில்)

மக்களது எதிரிகளுக்கெதிரான, மக்களது நியாயமான கோபாவேசத்தை, வெறுப்பை பொதுமைப்படுத்தப்பட்ட மனிதாபிமானம், மனிதநேயம் என்று எதிரியை மனிதனாக்குகின்ற, மனிதநேயத்துக்குரியவனாகச் சித்தரிக்கின்ற "அன்பே சிவம்" பாணி அரசியல் கருத்துக்களை வர்க்கக் கண்ணோட்டமில்லாமல் எழுதுவது, புரட்சியை மக்களின் உண்மையான துன்பங்கள், துயரங்கள், அவலங்கள், அடக்குமுறை நுகத்தடியில் வதைபடுகின்றதின் கொடிய பரிமாணங்களில் எங்கள் உணர்வுகளைக் கலக்க மறுத்து மக்களிடமிருந்து அந்நியப்பட்டுக் காண விழைவதாகும்.

நீங்கள் எழுதுவதுபோல் ராஜீவ் கொலையைக் கண்டிக்க மறுப்பது காட்டுமிராண்டித்தனமெனின் முதலாளித்துவப் பிற்போக்காளருடன் சமரசப்பட்டுப்போகாது புரட்சிப் பாதையில் உறுதியுடன் போராடிவருகின்ற இந்தியப் புரட்சிகர அமைப்புக்கள் எல்லாம் காட்டுமிராண்டித்தனமான, அநாகரிக அரசியலையா நடத்துகின்றார்கள்? மேலும் கொலையுண்டு போகும்வரை தகர்த்து நொறுக்கவேண்டிய அமைப்பின் பிரதானமானவனாக மக்கள்முன் அம்பலப்படுத்தும் எதிரியை கொலையுண்டவுடன் மட்டும் வருத்தம் தெரிவிப்பது எவ்வகையான அரசியல் நேர்மையாக இருக்கும்?

தொடர்ச்சி 27 ம் பக்கம்

www.padippakam.com

CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro
Danmark

# ஊரிலும் உலகிலும்

## மஹாநாயக்கவின் யாழ் விஜயம்

மல்வத்த மடாதிபதி வண. ரம்புக்வெல்ல ஸ்ரீ விபஸ்ஸி மஹாநாயக்க தேரரும் தலதமாளிகையின் தலைவர் திரு நிரஞ்சன் விஜயரத்னவும் (முன்னாள் அமைச்சர் நிஸ்ஸங்க விஜயரத்னவின் மகன்) புத்தபிக்குமார் சகிதம் யாழ்ப்பாணத்திற்குச் சென்றனர். இதுவே தென்னிலங்கையிலிருந்து பௌத்த முக்கியஸ்தர்கள் வடக்கே வருகை தந்த முதலாவது தடவை என்று சொல்லப் படுகிறது. வடக்கில் அல்லற்படும் மக்களுக்கு ஆறுதல் சொல்லவோ தொடரும் போருக்கு அமைதியான முடிவு தேடியோ இவர்கள் போயிருந்தால் அது வரலாறு போற்றும் ஒரு விஜயமாக இருந்திருக்கும். இராணுவத்தினரின் பிடியிலுள்ள தீவுப்பகுதிக்கும் பலாலிக்கும் போன மடாதிபதி இராணுவத்தினர் வெற்றிபெற ஆசி வழங்கினார்.

கலிங்கத்துப் போரில் மனம் வெறுத்த அசோகனின் மனமாற்றத்தால் இலங்கைக்கு வந்த பௌத்தத்தின் பிரதிநிதிகள் போருக்குத் தூபமிட யாழ்ப்பாணத்துக்குத் தம் முதலாவது விஜயத்தை நடத்தியுள்ளமை இவர்களுக்கும் அஹிம்சை, கருணை பற்றிய புத்தரின் போதனைகட்கும் உள்ள தூரத்தையே உணர்த்துகிறது.

## தொண்டமானின் முயற்சிகளுக்கு ஆப்பு

திரு தொண்டமானின் பேச்சுவார்த்தை முயற்சிக்குத் திரு பிரேமதாசவின் ஆசிகள் இருந்தன என்பது நியாயமான ஊகம். பேச்சு வார்த்தைகள் திட்டவட்டமான பிரேரணைகளின் அடிப்படையில் அமையுமாறு தொண்டமான் முன்வைத்த ஆலோசனைகள் இருந்தன. விடுதலைப் புலிகள் அவற்றை நிராகரிக்கும் வாய்ப்பும் அதிகம் இல்லை. எனினும், தொண்டமானின் யாழ்ப்பாண விஜயமும் பேச்சுவார்த்தைகளும் இப்போதைக்கு மறிக்கப்பட்டு விட்டன. இதில் சிங்கள-பௌத்த இனவாதம் மட்டுமன்றிச் சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளும் பங்கு வகித்தனர். தேசிய இனப்பிரச்சனையின் தீர்வுக்கான பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் தொண்டமான் உறுப்பினராகவிருப்பதால் அக் குழுவின் முன் தனது ஆலோசனைகளை முன்வைக்காமல் பேச்சுவார்த்தைகளில் இறங்குவது தவறு என்ற வாதம் உண்மையிற் பாராளுமன்ற ஜனநாயகம் நிலவும் ஒரு சூழ்நிலைக்குப் பொருந்தக்கூடும். அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஒரு உடன்பாட்டுக்கு வந்தாலும் நிலைக்கக்கூடிய தீர்ப்பு சாத்தியமோ என்பது ஐயத்திற்குரியது. நாட்டில் ஜனநாயகத்துக்கும் மனித உரிமைக்கும் போராடவேண்டிய முக்கிய எதிர்க்கட்சிகள் அரசாங்கத்துக்கு நெருக்கடியை நீடிக்கும் தேவைக்காக தேசிய இனப்பிரச்சனையுடன் விளையாடுவது எவருக்கும் நல்லதல்ல. தொண்டமானுடைய முயற்சியின் தோல்வியை விரைவில் பாராளுமன்றத் தெரிவுக்குழு ஈடு செய்யத் தவறுமாயின் அது வடக்கில் விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை மேலும் நியாயப்படுத்த ஏதுவாகும். விடுதலைப் புலிகட்குப் பாடம் படிப்பிக்க விரும்பி யுத்தத்தை நீடிக்க முனைவோர் தமிழ் மக்களைப் பகைத்துக் கொள்கிறார்கள். அதன்மூலம் அவர்களே இலங்கையின் பிரிவினையைத் தூண்டிவிடுகிறார்கள். பிரேமதாசவின் சர்வாதிகாரம் இப் பேச்சு வார்த்தைகளின் தோல்வியாற் பாதிக்கப்படுவதை விட மனித உரிமைக்கான ஜனநாயகசக்திகளது ஐக்கியமே பாதிக்கப்படுகிறது என்பதை உணர்ந்து எதிர்க்கட்சிகள் கூடிய பொறுப்புடன் நடப்பது அவசியம்.

Panimalar - 6
(Snow Blossom)
A Tamil Magazine

Published by:
Tamils' New Cultural Group
BCM POLARIS
LONDON WC1N 3XX

Editors:
M.Arudkumaran
N.Sabesan
S.Sivasegaram

Type-set by: R.Gurunathan
Printed by Set Line Data Ltd.



படிப்பகம்

## கொக்கட்டிச்சோலை: குற்றமும் தண்டனையும்

யூ.என்.பி அரசாங்கம் தன் ஆட்சியில் முதற்தடவையாக இராணுவத்தினர் குற்றவாளிகள் என்று ஏற்றுக்கொண்டுள்ளது. கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள்பற்றிய அரசாங்க விசாரணைக் குழுவின் முடிவு வரவேற்கத்தக்கது. ஆயினும் இத்தகைய படுகொலைகள் வேறு பல நடந்துள்ளன. அவை இனி நடக்காதுபோக ஒரு உத்தரவாதமும் இல்லை. சர்வதேச உதவி நிறுவனங்களின் நிபந்தனைகளையொட்டிய ஒரு கண் துடைப்பு முயற்சியாக இவ்விசாரணையின் முடிவு ஏற்பாடு செய்யப்பட்டதோ என்று பலரும் நியாயமாகவே ஐயுறுகிறார்கள். இலங்கை அரசாங்கம் குற்றவாளிகளை அடையாளங்கண்டு என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதையே மனித உரிமை பற்றி அக்கறையுடையோர் கவனிக்கிறார்கள்.

## சோஷலிஸம் போனது, சோறு வரவில்லை.

கிழக்கு ஐரோப்பாவில் அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்து இரு வருடத்திற்கும் மேலாகிவிட்டது. ஆயினும் ஒவ்வொரு கிழக்கு ஐரோப்பிய நாட்டினது பொருளாதாரமும் மேலும் மோசமடைந்துள்ளது. வேலையின்மை, பணவீக்கம், வறுமை என்பன சென்ற ஆண்டிற் பன்மடங்கு பெருகியுள்ளன. அரசியலிலும் ஸ்திரமின்மையே காணப்படுகிறது. குறுகிய தேசியவாதமும் இனவெறியும் அதிகரிக்கும் அறிகுறிகள் தெளிவாகவே தெரிகின்றன. ஜனநாயக மாற்றத்தை விரும்பி முதலாளித்துவத்தையும் சேர்த்துத் தழுவிக்கொண்ட இந்த நாடுகள் மேலை நாடுகளிடமிருந்து எதிர்பார்த்த உதவிகள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. கிழக்கு ஐரோப்பாவின் ஊழல் மிகுந்த ஆட்சிகளின் வீழ்ச்சியால் மக்கள் ஏன் நன்மையடையவில்லை என்று நாம் சிந்திப்பது பயனுள்ளது.

## காவிரி: கண்ணீரும் செந்நீரும்

காவிரி நீர்ப்பங்கீடு தொடர்பான சச்சரவு நெடுங்காலமாகவே இருந்து வருகிறது. நிலைக்கக்கூடிய ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தத் தமிழ்நாடும் கர்நாடகமும் மத்திய அரசும் இவ்வளவுகாலும் தவறியமையாலேயே காவிரிப் பிரச்சனை இன்றைய நிலைக்கு வந்துள்ளது. தமிழ்நாட்டுக்கு அவசியமான நீரை வழங்குவதற்குக் காவிரிநீர் பற்றாக்குறை காரணமல்ல. நீரின் சேமிப்பும் பாவனையும் முறையாகத் திட்டமிடப்படுமாயின் இரு மாநிலங்களது தேவையையும் நிறைவு செய்ய முடியும். இப்பிரச்சனையில் எப்போதுமே நீண்டகாலத் தேவைகளைவிடக் குறுகியகால வசதியே இரண்டு மாநில அரசுகளையும் வழிநடத்தியுள்ளது. நடுநிலையும் நியாயமும் வழங்கவேண்டிய மத்திய அரச நிர்வாகம் ஒவ்வொரு அரசிலும் யாருடைய கட்சி அதிகாரத்தில் உள்ளது என்றதற்கமைய நடந்து வந்துள்ளது. இதன் விளைவாகக் காவிரிப் பிரச்சனையால் நேரடியாகப் பாதிக்கப்படாதவர்கள் பயங்கரமான இனக்கலவரத்துக்குக் காரணமாகியுள்ளனர்.

தமிழ் நாட்டிலேயே முதலிற் கன்னடர்மீது தாக்குதல் நிகழ்ந்ததாகச் சில செய்திகள் கூறின. இது வெறும் வதந்தி என்று மறுக்கப்பட்டுள்ளது. எனினும், தமிழ்நாட்டில் கன்னட எல்லை மாவட்டங்களில் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளது மெய். எது எவ்வாறாயினும் இறுதியிற் தமிழர்களே அதிகம் பாதிக்கப்பட்டனர். இதன் பின்னணியில் நெடுங்காலமாகவே கர்நாடகத்தில் தமிழர்கட்கு விரோதமாக இருந்துவரும் உணர்வுகள் உள்ளன. கர்நாடகத்தில் வாழும் வசதிபடைத்த, மத்தியதர வர்க்கத் தமிழர் மீதான கசப்புணர்வுக்கு ஏழைத்தமிழர்களே பலியாகியுள்ளனர். இந்த நிலவரம் நீடிக்கக்கூடாது. இன்று தமிழ் நாட்டிலும் கர்நாடகத்திலும் உள்ள சகல சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளும் இனஉணர்வை மேலும் கிளறி விடுகிறார்களே ஒழிய இரு மாநில மக்களிடையிலும் உறவைச் சீர்படுத்த முயலவில்லை. இலங்கையில் இனத்துவேஷத்தின் பாடங்களை இந்தியாவின் பல்வேறு தேசிய இனத் தலைவர்கள் எப்போது கற்கப் போகிறார்கள்?

*மாதொருபாகன் பக்கங்களும் வழிப்போக்கன் டயறியும் ஆசிரிய குழுவின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்களால் இவ்விதழிற் பிரசுரமாகவில்லை.*


பனிமலர் - 6
ஏப்ரல் 1992
வெளியீடு:
தமிழ்மக்கள் புதிய கலாச்சாரக்குழு

தொடர்புகளுக்கு:
BCM POLARIS
LONDON WC1N 3XX
U.K.

ஆசிரியர் குழு:
ம.அருட்குமாரன்
நா.சபேசன்
சி.சிவசேகரம்

எழுத்துப்பதிவு: இ.குருநாதன்
அச்சுப்பதிவு: Set Line Data Ltd.

www.padippakam.com



## எரிந்து கொண்டிருக்கும் நேரம்

இன்று வாய் திறவாதே
மௌனம் கொள்
இன்று மட்டும்

நம் வாயிலிருந்து வருகிற
ஒவ்வொரு உண்மைக்கும்
ஒவ்வொரு துப்பாக்கிக் குண்டு
பரிசாகக் கிடைக்கிற
காலம் என்று வருமோ?

அல்ல எனில்
ஏன் இந்த அவலம்?

முச்சந்தி மாமரத்தின் கீழ்
எரிந்தன உடல்கள்
எழுந்த சுவாலைகளில்
கருகின குருத்துக்கள்

புகை
அச்சம்
கொடுமை
துயரம்
பீதி
அனைத்துமே கறுப்பு;
அசுர நிறம்

துர்க்குறிகள் விரவி
இருளின் நிழல்கள் கவிய
உடல்களும் மனமும் எரிந்து
கொண்டிருக்கும்
இந் நேரம்

குரல் ஒடுங்கிப்
பாடல் இழந்தன குயில்கள்
மிரட்சி தெறித்த விழிகள் நிமிர்த்தி
அலற மறந்தனர் சிறுவர்

சாம்பலைக் காற்றுக்
கொண்டு போயிற்று;
எலும்புகளை நாய் கொண்டு
போயிற்று

மனிதத்தைத் துப்பாக்கி முனையில்
நடத்திச் சென்று
புதைகுழி விளிம்பில் வைத்துச்
சுட்டுப்
புறங்காலால்
மண்ணைத் தள்ளி மூடிவிட்டு வந்து
தெருவோரம் சுவரில்
குருதியுறைந்து
நியாயம் சொல்கிறார்கள்
நியாயம்!

யார் கேட்டார்
உம்மிடத்தில் நியாயத்தை?

எச்சிறு புல்லும்
எச்சிறு தளிரும்
எச்சிறு புள்ளும்
நம்பிக்கைகளின் உயிர்
மூச்சுடனேயே
வளரும்;
முதிரும்;
மடியும் என நான் அறிவேன்

எனினும்
சாபங்கள் சூழ்ந்த
தாய்நாடு எமதென
துயரில் புலம்பும் முதியோர்
சிலருக்கு
இக்கணம்-
உயிர்களும் மனமும் எரிந்து
கொண்டிருக்கும்
இக்கணம்
நம்பிக்கையை எப்படி உரைப்பேன்?

புதைகுழிகளுக்கிடையில்
பிணங்களுக்கிடையில்
குருதி படிந்த உடைகளுக்கிடையில்
புத்திர சோகத்தில் நெஞ்சு பிளந்த
அன்னையர் கண்ணீர்த்
துளிகளுக்கிடையில்

'துர்ப்பாக்கியம் தற்காலிகமானது'
என்று குரலெழுப்ப

மெலிந்த உடலும்
வளர்ந்த தாடியும்
உடைந்த மனமும்
குழம்பிய தலையுமாய்
வார்த்தைகளுக்கு அலைகிறேன்
நான்.

சோரன்
சித்திரை '86



படிப்பகம்

www.padippakam.com

# பெண்களுக்கு வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன

## சித்ரலேகா மௌனகுருவுடன் ஒரு சந்திப்பு.

*(1991 ஒகஸ்ற் இறுதியில் கிழக்கு லண்டனில் நடந்த ஒரு சிறப்புக்கூட்டத்தில் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் சித்ரலேகா மௌனகுரு ஆற்றிய உரையின் தொகுப்பும் உரையை அடுத்து எழுந்த கேள்விகட்கு அவரது விடைகளும் கீழுள்ளன.)*

சித்திரலேகாவின் உரை சென்றவருடம் மரணமடைந்த பெண்கவிஞர் சிவரமணியை நினைவுகூர்ந்து தொடங்கப்பட்டது. தனது உரையின் முற்பகுதியில் சிவரமணியின் கவிதைகள் உருவான சமுதாயச் சூழல் பற்றியும் அவரது கவிதைகளின் வலிமை பற்றியும் எடுத்துக்கூறிய சித்ரலேகா தொடர்ந்து தமிழ் ஆக்க இலக்கியமும் பெண்களும் என்ற பொருள் பற்றித் தனது கருத்துக்கள் சிலவற்றைக் கூறினார்.

தனியே பெண்களுடைய ஆக்கங்கள் என்று பிரித்துப் பார்க்கும் போக்கு நம்மிடையே இல்லை எனவும் பெண்களுடைய ஆக்கங்கள் அலட்சியப்படுத்தப்பட்டு வந்துள்ளன எனவுங் குறிப்பிட்ட அவர், தாங்கள் சிலர், சமீபகாலமாகப், 'பெண்களது ஆக்க இலக்கியமும் கலை வெளிப்பாடுகளும்' என்ற கருத்தாக்கத்தை வலியுறுத்தி வருவதாகக் கூறினார்.

1986இல் ஈழத்துப் பெண் கவிஞர்கள் எழுதிய கவிதைத் தொகுப்பான 'சொல்லாத சேதிகள்' பிரசுரமானது. அதை விமர்சித்த சிலர் தனிப்பட்ட உரையாடல்களில் இப் பெண்கள் மனநோய் பிடித்தவர்கள் என்று குறிப்பிட்டதாயும் வேறு சில ஆண் விமர்சகர்கள் இம் முயற்சியையே புறக்கணித்தாகவும் சுட்டிக்காட்டினார். சில இளைஞர்கள் மட்டும திறந்த மனத்துடன் இக் கவிதைகளை வரவேற்றனர். ஆயினும் அவர்களது கருத்துக்கள் அதிக தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. எவ்வாறாயினும் அத்தொகுதி வெளியானதையடுத்து அதில் எழுதியோரும் பிறபெண்களும் உற்சாகமடைந்தனர் என்று கூறிய சித்ரலேகா பின்வருங் கருத்துக்களையும் வலியுறுத்தினார்.

ஆண்களின் ஆதிக்கத்துக்குட்பட்ட சகல துறைகளிலும் போன்று, நிலைநிறுவப்பட்ட இலக்கியத் துறையிற் பெண்கள் புகுவது சிரமமாகவே உள்ளது. எனவே பெண்களது இலக்கிய முயற்சிகட்குக் கூடிய ஊக்கங் கொடுப்பதும் தனியே அதுபற்றிச் சிந்திப்பதும் அவசியமாகிறது.

1960களில் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பெண்ணிலைவாதத்தின் இரண்டாவதுகட்ட எழுச்சியின்போது பெண்ணுரிமை, பெண்களின் போராட்டம் என்ற கருத்தாக்கங்களின் பின்னணியில் பெண்களின் ஆக்கமுறைமை என்ற கருத்தாக்கம் உருவானது. இலக்கியத்திற் பெண்களின் மொழிக் கையாளுகை ஆண்களினுடையதினின்று குறிப்பிடத்தக்க வேறுபாடுடையது என்பது பலவேறு சமுதாய உதாரணங்கள் மூலம் காட்டப்பட்டது. பெண்களது இலக்கிய மொழி ஆளுமை வெளிப்பாட்டுமுறை என்பன தனிச்சிறப்புக்களை அல்லது வித்தியாசமான தன்மைகளையுடையன என்றும் உணர்த்தப்பட்டது.



பெண்கள் பற்றிய பாரம்பரியமான எதிர்பார்ப்புக்கள், வீடு, குடும்பம், பிள்ளைப்பராமரிப்பு, அலங்காரம் என்ற வரையறைகட்குள் பெண்களது கலை ஆக்கங்களைச் சமூகம் ஏற்றுக்கொண்டது. அதாவது தையற்கலை, பின்னல், வீட்டலங்காரம், ஆகியவற்றிற் பெண்களது ஆக்க முயற்சிகள் எப்போதும் போற்றப்பட்டன. பெண்களும் அவ்வரையறைக்குள்



படிப்பகம்

www.padippakam.com

இயங்கக் கற்றுக்கொண்டனர். அவர்களால் அதற்குள் மகிழ்ச்சிகாண இயலுமாயிற்று. அதற்கு அடுத்தபடியிற் சங்கீதம், நடனம் போன்றவை பெண்களுக்குரியனவாகக் கருதப்பட்டன. இவற்றிலுஞ் சில வரையறைகளிருந்தன. குறிப்பாக இலங்கை மத்தியதர தமிழ்ச் சமுகத்தினரிடையே 1960-70களில் சமுதாய அந்தஸ்தை உணர்த்தும் சாதனங்களாக இசை, நடனம் (பரதநாட்டியம்) என்பன விருத்திபெற்றுப் பெரும்பாலும் அரங்கேற்றத்துடன் முற்றுப்பெற்றன. பின்னர் அரச அங்கீகாரத்தை அடுத்து அவை தொழிலுக்குரிய கலைகளாக ஏற்கப்பட்டன. இங்கு முக்கியமான அம்சம், பெண்களைப் பொறுத்தவரையில், கலை என்பது தனியே கலையாக இல்லாமல் வேறு பயன்பாடுகளுடன் சேரும்போதே ஏற்கப்பட்டது என்பதாகும்.

ஓவியம், சிற்பம், நாடகம் போன்ற துறைகளிற் பெண்கள் பங்குபற்றுவது கொஞ்சம் வித்தியாசமாகவே கருதப்பட்டது. இங்கு முக்கியமான ஒரு விடயத்தை மனங்கொள்ள வேண்டும். எழுத்தியக்கந் தவிரத் தமிழில் வாய்மொழி இலக்கியத்திற்கு நீண்ட பாரம்பரியம் உண்டு. பெரும்பாலும் பெண்களது இலக்கிய ஆக்கம் நெடுங்காலமாகவே வாய்மொழி இலக்கியமாக இருந்து வந்துள்ளது. நாட்டார் பாடல்களும் பெருமளவில் ஒப்பாரி, தாலாட்டுப் போன்றவையும் பெண்களால் ஆக்கப்பட்டவை எனலாம்.

அண்மையிற் காரை சுந்தரம்பிள்ளை என்பவர் யாழ்ப்பாண இசைநாடக மரபு பற்றித் தனது பிஎச்.டி.க்கான ஆய்வை மேற்கொண்டார். அது தொடர்பாகப் பலரைப் பேட்டி கண்டார். அதிற் பெண்கள் எவரும் இல்லை. இவ்வாறே திரு மௌனகுருவின் ஆய்விலும் பெண்கள் எவருமே குறிப்பிடப்படவில்லை. இது ஏன்? பெண்கள் எவருமே மரபுவழி நாடகங்களிற் பங்களிக்கவில்லையா? பெண்கள் மேடையில் நடித்திருக்காவிடின் ஒப்பனையிற் பங்குபற்றியிருக்கலாம்; கூத்துக்கான ஆடைகள் தைத்திருக்கலாம்; அந்த ஆடைகளில் மணிகளைத் தைத்திருக்கலாம்; அரங்கத்திற்குப் பின்னால் தயாரிப்பு வேலையில் ஈடுபட்டிருக்கலாம். இவைபற்றி எவருமே அக்கறை கொள்ளவில்லை. அதாவது, இவர்களது கலை ஆய்வு, அனைவருமே ஆண்கள் என்ற அடிப்படையிலேயே இருந்துள்ளது. இதனையே ஆராய்ச்சித் துறைகளில் ஆண் முதன்மை நோக்கு என்கிறோம். இத் தேடுதலில் இப்போது சில பெண்கள் ஈடுபட்டுள்ளனர்.

இச் சூழலில் விடயங்கள் எளிதாக மறக்கப்படலாம் என்பதால் ஆக்க இலக்கியத்திற் பெண்களுடைய இலக்கியத்திற்கான ஒரு பதிவு (record) அவசியம். பெண்கள் இலக்கியம் பற்றிய ஒரு வரலாற்றின் தேவை இப் பின்னணியிலேயே ஏற்படுகின்றது.

சித்ரலேகா மேலும் பேசுகையில் 1941இல் முதலாவது நாவல் எழுதிய ஈழத்துப் பெண் எழுத்தாளர் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மங்களநாயகம் தம்பையா எனவும் அந்த நாவலின் தலைப்பான 'நொறுங்குண்ட இருதயம்' பெண்களின் ஒடுக்கலைப் பற்றிப் பேசும் வகையில் ஒரு குறியீடு போன்றது என்றும் குறிப்பிட்டார். நாவல் காட்டும் பாதை கிறிஸ்துவ மதத்தில் சேர்வது என்ற தீர்வு இன்னொரு விடயமாயினும் நாவலின் உள்ளடக்கம் முக்கியமானது என்றுஞ் சுட்டிக்காட்டினார். 1920களில் எழுதிய ராசம்மாள், செல்லம்மாள் என்போரைக் குறிப்பிட்ட அவர் இவர்களது ஆக்கங்களில் அதிகம் முக்கியத்துவமில்லை என்றுஞ் சொன்னார். 1930களில் எழுதிய மாசிலாமணி மங்கம்மாள் என்பவரின் பங்களிப்பைக் குறிப்பிட்டு அவர் தந்த தகவல்கள் பின்வருமாறு:

மங்களம்மாள் 'தமிழ்மகள்' என்னுஞ் சஞ்சிகையை மிருந்த சிரமங்கட்கு மத்தியில் நடத்திவந்தார். 1931இல் பெண்களுக்கு வாக்குரிமைபற்றி டொனமூர் ஆணைக்குழுவுக்குக் கருத்துக்கூறிய ஒரு தூதுக்குழுவில் அவரும் இருந்தார். ஸேர் பொன்னம்பலம் ராமனாதன் போன்ற தமிழர் தலைவர்கள் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்படுவதை ஆதரிக்காத ஒரு சூழலில் மங்களம்மாள் மிகத் துணிவாகப் பெண்களுக்கு வாக்குரிமை தொடர்பான பிரசாரத்தில் ஈடுபட்டார். பெண்களின் சீதனச் சொத்தைக் காட்டியே ஆண்கள் வாக்குரிமை பெற்றனர் என்பதால் பெண்களாலேயே ஆண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது என்று சாதுரியமாக வாதிட்டார். 'தமிழ்மகள்' சஞ்சிகையின் திறப்பு வாசகம் 'நாமார்க்கும் குடியல்லோம்' என்றிருந்தமை தமிழ்மகளின் நிலைப்பாடுபற்றி நமக்குக் கூறுகிறது. மங்களம்மாளின் பெண்ணுரிமை நிலைப்பாடு ஆணாதிக்கச் சிந்தனையாளரின் பழிப்பையும் பகைமையையும் சம்பாதித்தது.

பின்னைக்காலத்தில் 'மறுமலர்ச்சி', 'ஈழகேசரி' போன்ற பத்திரிகைகளிற் பெண்கள் எழுதிய சிறுகதைகள் பிரசுரமாயின எனவும் ஐம்பதுகளின் பிற்பகுதியில் எழுதத்தொடங்கினோரில் முக்கியமான பெண் எழுத்தாளர் பவானி ஆழ்வாப்பிள்ளை எனவுங் குறிப்பிட்ட அவர், அன்றைய சூழலில் பவானி எழுதிய சிறுகதைகளை, முக்கியமாக 'மன்னிப்பாரா', 'பிரார்த்தனை' என்பனவற்றைத் மிகவுந் துணிச்சலான முயற்சிகளெனவும் பெண்களின் ஒழுக்கம் மரபு சார்ந்த பார்வையைக் கேள்விக்குள்ளாக்கின எனவுங் கூறினார்.

மரபுவாதிகளின் கடுமையான கண்டனமும் அவரது கதைகளை மறுக்குமாறான கதைகளும் காரசாரமான விவாதமும் அவரது கதைகளின் பிரசுரத்தைத் தொடர்ந்தையும் 1965க்குப் பின் பவானி எழுதாமைக்குக் காரணம் வழமைபோன்று பெண்கள் எதிர்கொள்ளவேண்டிய (குடும்பப் பொறுப்புக்கள் தொடர்பான) நிலைமைகளே என்பதையும் எடுத்துக்கூறிய சித்ரலேகா, கவிதா (யுகங்கள் கணக்கல்ல), யோகேஸ்வரி ஜயாத்துரை, குந்தவி போன்ற சிறுகதை ஆசிரியர்களைக் குறிப்பிட்டு, 1960-70களின் பெண் கதாசிரியர்களுட் தொடர்ந்தும் எழுதுபவராக ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் மட்டுமே உள்ளார் எனவுஞ் சொன்னார். மேலும், பின்வரும் பெண் எழுத்தாளர்கள் பற்றி அவர் விசேஷமாகக் குறிப்பிட்டார்.

ஊர்வசி, சிவரமணி, செல்வி : கவிதை (சொல்லாத சேதிகள், தொகுப்பு)

கோகிலா மகேந்திரன்: நாவல்; அதிகளவில் எழுதிய பெண் எழுத்தாளர்.

மேலும் பேசுகையில், 1975 சர்வதேசப் பெண்கள் ஆண்டாக ஐ.நா. சபையாற் பிரகடனஞ் செய்யப்பட்டதை அடுத்து 1975 டிஸெம்பரில் யாழ் பல்கலைக்கழகத்தில் நடந்த பெண்கள் தொடர்பான கண்காட்சியும் 1970கள் தொடக்கம் பெண்கள் குழுக்கள் செயற்படத் தொடங்கியமையும் 1980களின் அரசியல்-சமுதாய காரணிகளும் பெண்களை எழுவதற்குத் தூண்டினாலும், பாடசாலையிலும் பல்கலைக்கழகத்திலும் எழுதிய பெண்கள் பிரசுரவசதி இல்லாமை, உற்சாகமூட்டப்படாமை, குடும்பம், உத்தியோகம் போன்ற காரணங்களால் 22-23 வயதுக்குப் பின் பொதுவாக எழுதுவதில்லை என்று விளக்கினார். ஆண்கள், பெண்களது எழுத்துக்களில் ஆணாதிக்க சமுதாய விழுமியங்களை மறுக்குஞ் சிந்தனைகள் வரும்போது அவற்றுக்கு முகங்கொடுக்கும் விதம்பற்றிக் கீழ்வரும் உதாரணத்தைத் தந்தார்.

கோகிலா மகேந்திரனுடைய 'துயிலும் ஒருநாள் கலையும்' என்ற நாவலின் இறுதியில் கதாநாயகி கணவனைப் பிரிந்து போகிறாள். இந்தப் பிரிந்து போதல்/வெளியேறல் யாழ்ப்பாணத்தில் பல காரசாரமான விவாதங்களை எழுப்பியது. இதற்கு அணிந்துரை எழுதிய சுப்பிரமணிய ஐயர், காலங்காலமாக அடங்கியிருந்த பெண் அநியாயத்தை எதிர்த்துக் குரல் கொடுக்கிறாள் எனவும் சுதந்திர வேட்கைக்கு ஒழுக்கநிலை சார்ந்த அவப்பெயர் ஏற்படாமல் ஆசிரியை காப்பாற்றியிருக்கிறார் எனவுங் கூறிவிட்டு, "இன்னும் ஆழ்ந்து சிந்தித்தால் 'விடுதலை பெற்றுத் தனித்துவாழும்" நோக்கிலான இன்றைய அரசியற் சூழலின் உருவகமாக இதனைக் கொள்ளலாம்' எனவுங் குறிப்பிட்டுள்ளார். நாவலில் கூறப்படும் விடயத்தை ஏற்றுக்கொண்டு அதனை நேரடியாக விமர்சனம் செய்வதை விடுத்து அதனை உருவகமாகக் கொள்ளலாம் என்று



படிப்பகம்

www.padippakam.com

எழுதியதன் பின்னணி என்ன? நாவலின் செய்தி ஏற்படுத்திய சங்கடமா? இவை சிந்தனைக்குரியவை.

1989-91 கால இடைவெளியிற் பெண் எழுத்தாளர்களின் மொழிக்கையாளுகையிலும் சிந்தனை ஓட்டத்திலும் முக்கியமான மாற்றம் ஏற்பட்டது என்று கூறிய சித்ரலேகா தான் அதை எழுத்தாளர்களின் எண்ணிக்கையைக் கொண்டு கூறவில்லை எனவும் குணாம்ஸ வேறுபாடுதான் கணிப்பிற்குரியது எனவுஞ் சொன்னார். பெண்களின் படைப்புக்களைப் பற்றி எழுதிவிட்டு அவற்றுட் குறிப்பிட்டுச் சொல்லும்படி எதுவுமில்லை என்று கூறுவது ஒரு வாய்ப்பாடு போலாகிவிட்டது என்று தான் நினைப்பதாகவுங் கூறிய சித்ரலேகா பின்வருங் கேள்விகளை எழுப்பினார்.

பெண்கள் பெரிதாக எதையுஞ் சாதிக்கவில்லையென்றால், அது ஏன்? பிரபல எழுத்தாளர்களின் பட்டியலிற் பெண்களின் பேர்கள் ஏன் சேர்வதில்லை என்ற கேள்வியை நாம் ஏன் எழுப்பவில்லை? இக் கேள்விகட்குப் பதிலளிக்கு முகமாக அவர் பின்வரும் விளக்கத்தை முன்வைத்தார்.

வெளியுலகப் புறக்கணிப்பு ஒருபுறமிருக்க, வெளியுலகம் பெண்களைப்பற்றிக் கொண்டுள்ள விழுமியங்களை அவர்களே தம்முள் ஏற்றுக்கொண்டு தமது ஆக்கங்களைப் புறக்கணித்து விடுகிறார்கள். பெண்கள் ஊடாடும் எல்லை மிகக் குறுகலானது. அதனால் அவர்களது அனுபவ அறிவுப் பரப்புக்களும் குறைவாகவே உள்ளன. அதைவிடச் சில விடயங்கள் பற்றி அவர்கள் சிந்தித்தாலும் அவைபற்றி அவர்கள் பேசமுடியாது. பெண்கள் இவைபற்றி எழுதமுடியாதபடி சமுதாய, மனத்தடைகள் இயங்கி வருகின்றன.

பெண்கள் ஆண்களைச் சார்ந்து நிற்கும் நிர்ப்பந்தத்தில் வெளியிலிருந்துவரும் ஒடுக்கலைவிட உள்ளாக்கப்பட்ட ஒடுக்குமுறை முக்கியமானதும் சாதி, கொலனித்துவ அமைப்புக்களின் ஒடுக்குமுறையுடன் ஒப்பிடத்தக்கதும் என்று விளக்கிய சித்ரலேகா, 'சொல்லாத சேதிகள்' 1988இல் தமிழ்நாட்டில் மறுபிரசுரமானமை, கொழும்பு முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி முன்னணி 1990இல் நடத்திய கருத்தரங்கு போன்றவை நம்பிக்கையூட்டும் அறிகுறிகள் என்று கூறினார். இன்று பல பெண்கள் இலங்கை வானொலி வர்த்தக சேவை, சிந்தாமணி வார சஞ்சிகை போன்றவற்றுக்கு எழுதுவதையும் குறிப்பிட்டார். கலந்துரையாடல்களும், சிறுகதைப் போட்டியும் அதன் விளைவான தொகுதியும் போன்ற நடவடிக்கைகள் இவ்வளவு கஷ்டமான காலத்திலும் நடைபெறுவது நம்பிக்கையூட்டுகிறது என்று கூறித் தன் உரையை முடித்தார்.

*[உரையைத் தொடர்ந்து நடந்த கலந்துரையாடல், கீழே கேள்வி-பதில் வடிவில் உள்ளது. பங்குபற்றிய அனைவரது பேர்களுந் தெரியாமையால் அவை தரப்படவில்லை.]*

**கே.1:** ராஜம் கிருஷ்ணன் தமிழகத்தின் சிறந்த நாவல் இலக்கியவாதிகளுள் ஒருவராகக் கருதப்படுகிறார். அதேவேளை இலங்கையில் பாலேஸ்வரி, தமிழகத்தில் இந்துமதி, சிவசங்கரி போன்றோர், ஆண்கள் எழுதுவதுபோன்று, ஆணாதிக்கச் சிந்தனையுடைய படைப்புக்களை ஆண்களுக்கு நிகரான அளவில் எழுதி வெற்றி கண்டுள்ளார்களே, அது பற்றி என்ன சொல்கிறீர்கள்?

ப. : வர்த்தக இலக்கியத்தைப் பற்றி நான் பேசவில்லை. ஆண்களைப்போலவே பெண்களும் அதை எழுதமுடியுமென்பதற்குத் தமிழிலும் பிறமொழிகளிலும் பல உதாரணங்கள் உள்ளன.

**கே.2:** இலங்கைப் பத்திரிகைகளிலும் தமிழ்ச் சிறு சஞ்சிகைகளிலும் பெண்களுக்கு ஆண்களுடன் ஒப்பிடத்தக்களவு பிரசுர வாய்ப்புகள் இருப்பதாகக் கூறலாம். அதைவிட, இலங்கையில் பெண்ணிலை ஆக்கங்கள் பற்றிக் கூடுதலான சகிப்புத்தன்மை காணப்படுகிறது எனலாம். இவைபற்றி என்ன சொல்கிறீர்கள்?

ப.: சகிப்புத்தன்மை என்றீர்கள். அது முக்கியமானதொரு சொற் பிரயோகம். ஆண்களுக்குள்ளது போலவே பெண்களுக்கும் பிரசுர வாய்ப்புள்ளதாகச் சொன்னீர்கள். இப்போது உள்ளது. அதிலும் சிறு சஞ்சிகைகளைப் பொறுத்தவரையிலேயே. ஆனாற் பொதுவான ஏற்புடைமை, பொதுவான வசதி, பொதுவான ஏற்பு, பொதுவான சகிப்பு இல்லை. உள்ளதற்கும் வரையறைகள் இருக்கலாம். நினைப்பதை எல்லாம் எழுதமுடியாது.

**கே.3:** பெண்கள் மட்டுமன்றி ஆண்களும் தமது மனத்தடைகளினின்று விடுபடவேண்டியுள்ளது. பெண்விடுதலை பெண்களுக்கு மட்டுமே உரிய ஒன்றல்ல. அதில் ஆண்களும் பங்குபற்ற வேண்டும் என்று நினைக்கிறேன். என்ன சொல்கிறீர்கள்?

ப: சரியாகச் சொன்னீர்கள். மனத்தடைகளினின்று தம்மளவில் விடுபடுவது மட்டுமல்ல, சமூகத்தின் பல்வேறு அமைப்புக்களிலும் பொதிந்திருக்கும் ஆதிக்கத்தன்மைகளை அகற்றுவதற்காகச் செயற்படவேண்டும். மேலும் சுய விமர்சனம் வேண்டும்.

**கே.3:** பெண்ணுரிமைப் போராட்டம் தனிமைப்பட்டுப் போகக்கூடாது என நினைக்கிறேன்.

ப: தனிமைப்படக்கூடாது, படவும் முடியாது. அது சகலவிதமான ஆதிக்கங்கட்கும் எதிரான போராட்டமாகும். ஆனால், பெண்கள்பற்றிப் பேசும்போது மட்டும் இப்படிச் சொல்கிறார்கள். இதே வாதத்தை சாதி, இன ஒடுக்கற் பிரச்சனைகளில் ஏன் பயன்படுத்துவதில்லை?

**கே.3:** சாதி ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டம் குறிப்பிட்ட சாதியினருக்கெதிரானதாக மாறக்கூடாது, இன ஒடுக்கலுக்கெதிரான போராட்டம் சிங்கள மக்களுக்கெதிரானதாக மாறக்கூடாது என்று சொன்னவர்களதான், போராட்டங்கள் தனிமைப்பட்டுப் போகக்கூடாது என்று கூறிவருகிறார்கள். உயர் சாதியினர் மத்தியிலும் சிங்கள மக்கள் மத்தியிலும் வென்றெடுக்கத்தக்க சக்திகள் உள்ளன என்று அவர்கள் வலியுறுத்தினார்கள். இதனாலேயே ஒரு கவிதையில் வந்த 'வேற்றுமொழிக் கூச்சலும்' என்ற இனவாதச் சொற் பிரயோகம் கண்டிக்கப்பட்டது.

ப.: தமிழில் (பெண்ணிலைவாதிகள்) இத்தகைய கருத்துக்களை எங்கே வைத்தார்கள்?

**கே3:** 'சக்தி'யில் இதுபோன்ற முனைப்புள்ள எழுத்துக்களைக் கண்டுள்ளேன். மேல்நாட்டு எழுத்துக்களில் மிகவும் உண்டு. வியற்னாம் யுத்த காலத்திலிருந்த நிலையிலிருந்து அமெரிக்கப் பெண் விடுதலை இயக்கம் வியாபார நோக்குடைய ஒன்றாகவும் மாறியுள்ளது.

**லண்டன் தமிழா! (1)**

*சொந்தமினம் சாதிகள் தெரிந்தார்*
*கந்தவனம் லண்டனுக்கு வந்தார்*
*'பாக்கி'யென ஈஸ்ற்ஹாமில்*
*போக்கிரிகள் கூவியதில்*
*நொந்துமிக வேதனையில் வெந்தார்.*



படிப்பகம்

www.padippakam.com

ப: நீங்கள் குறிப்பிடும் போக்கைக் காட்டும் ஆக்கங்களைச் சக்தியில் படிக்குமுன் நான் இதற்குப் பதில் சொல்ல இயலாது. ஆனால், அமெரிக்காவில் இப்படி என்று பொதுமைப்படுத்த முடியாது. வெவ்வேறு தத்துவார்த்த நிலைப்பாடுகள் உள்ளன. அங்கும் பல்வேறு போக்குகள் உள்ளன. மேற்கு ஐரோப்பாவிலும் இந்தியாவிலுங்கூட வெவ்வேறு போக்குகள் உள்ளன. இங்கு இப்படி, அங்கு அப்படி என்று பொதுமைப் படுத்திச் சொல்லமுடியாது.

**கே.3: நான் சொல்லவுமில்லை. 1960களில் நடந்ததன் விருத்தியைச் சொன்னேன். ஆழமற்ற சமுதாயப் பார்வை, பிரச்சனைகளைத் தனிமைப் படுத்தும் போக்கு, மற்றைய அனுபவங்களைக் கணிப்பிலெடுக்கத் தவறுவது என்பன பாரிய தவறுகட்கு வழி வகுக்கலாம். இடதுசாரி இயக்கங்களின் தவறுகளைப் பெண் விடுதலை இயக்கமும் செய்யவேண்டுமா?**

**கே.4: பெண்கள் தங்களது உழைப்பில் வாழ்க்கை நடத்தக்கூடியவர்களாக இருப்பது தனியே பெண் விடுதலைக்குப் போதுமானதா?**

ப.: பெண்கள் ஆண்கள்மீது தங்கியிருக்கச் செய்யும் பிற காரணிகளும் உள்ளன. உதாரணமாக, சமுதாயச் சித்தாந்தமும் பெண்ணுக்குத் தன்னைப் பற்றியுள்ள கருத்தும். அதாவது, நான் முன்பு கூறிய அகநிலைப்பட்ட, உள்ளாக்கப்பட்ட ஒடுக்குமுறை; இன்னொருவகையில், ஆணாதிக்கக் கருத்து நிலையைப் பெண்களே ஏற்றுக்கொள்ளுதல். பொருளாதார ஒடுக்குமுறையளவு கருத்துநிலை-கலாசார ஒடுக்குமுறையும் வலிமை வாய்ந்தது. இதனாற்றான் சுதந்திரமாகச் சம்பாதித்தாலும் சுதந்திரமில்லை.

**கே.5: சிங்களப் பெண்கள் தமிழ்ப் பெண்களைவிடக் கூடிய விடுதலை ஆர்வமுடையவர்களாகத் தெரியவில்லையா?**

ப: சிங்களப்பகுதி, தமிழ்ப் பகுதி என்று பிரித்துப் பார்க்க இயலாது. விழிப்புணர்வும் எல்லாச் சிங்களப் பகுதிகளிலும் இல்லை. தமிழ்ப் பெண்களிடையேயும் தீவிரமான ஆர்வங்கொண்டோர் உள்ளனர்.

**கே.5: தமிழர் பின்தங்கி இருக்கலாம்.**

ப.: இனரீதியாக இல்லை. நகரம்-கிராமம் என்ற விதமாக உண்டு. மேலும் உடனடியாக முக்கியத்துவம் பெறும் பிரச்சனைகளைப் பொறுத்தும் பெண்கள் செயலூக்கம் பெறுகிறார்கள். விவசாயிகளின் பிரச்சனை, சூழற்பாதுகாப்பு, மனித உரிமைகள் என்பனவற்றில் இக்காலகட்டத்திற் பெண்கள் அதிக அக்கறை காட்டுகிறார்கள். தமிழ்ப் பகுதிகளில் வளர்ந்த பெண்கள் இயக்கம் பற்றிய வரலாறு எழுத முனைந்தால் அது பல விடயங்களை வெளிக்காட்டும். மலைநாட்டுத் தொழிலாளப் பெண்கள் தமது உரிமைகள் தொடர்பாகப் பல போராட்டங்கள் நடத்தியுள்ளனர்.

*[கூட்டம் நன்றியுரையுடன் முடிந்தது. சித்ரலேகா எழுதும் கட்டுரை ஒன்று நோர்வேயிலிருந்து வரும் 'சக்தி'யில் பிரசுரமாகி வருகிறது. இன்னொன்று 'சவடுகள்' சஞ்சிகையில் பிரசுரமாகியுள்ளது. அவர் அங்கும் இங்கும் எழுப்பும் கேள்விகள் பற்றிப் 'பனிமலர்' உங்கள் கருத்துக்களை வரவேற்கிறது. -ஆசிரியர் குழு]*

## இன்னொருவனுக்கு....

*இப்பொழுதும் என்னை*
*நினைத்துக் கொண்டுதான்*
*இருக்கிறாயா?*

*'மறந்துவிடு' என்று*
*உனக்கு, நான்*
*சொல்ல முடியாதுதான்*
*இருந்தாலும்*
*பொருந்தாத வேஷங்கள்*
*வாழ்க்கையில் எதற்காக?*

*நீயும் நானுமாய்*
*நடந்த வெளிகளில்*
*இன்று, கட்டிடங்கள்*
*அரைகுறையாய்....*
*சூழவும் மணல்*
*தடங்களுடன்.*

*'அவனதும் என்னதும்'*

*உனக்கு நினைவிருக்கிறதா?*
*அந்த மஞ்சள் மலர்கள்....*
*இப்பொழுதும்*
*மரம் நிறைய*
*தரை நிறைய*
*மஞ்சள்தான்.*

*மற்றபடி, இங்கு*
*எல்லாமே படுமோசம்!*
*உப்புக்காற்று*
*சவுக்கு மரம் தழுவி*
*மணலை*
*வாரி இறைக்கிறது.*
*புறாக்களும்*
*வெறுமே மரங்களைச்*
*சுற்றிப் பறந்தபடி.*

*இன்று,*
*இவனருகில்*
*மணல்வெளியில்*
*திரிதலில்*
*ஏனோ உன்முகம்*
*நினைவுக்கு வருகிறது.*
*அடிக்கடி,*
*ஒரு புரியாத புத்தகத்தைப்*
*படிக்க விரும்புகிற*
*குழந்தையின்*
*முகம் போல....*

*-ஊர்வசி- 1980.*

முழு மானிடத்தினதும் அத்தியாவசியத் தேவைகளை இந்தப் பூமியால் நிறைவு செய்ய முடியும், ஆனால் ஒரு மனிதனுடைய பேராசையை அதனால் நிறைவு செய்ய முடியாது.
-காந்தி



படிப்பகம்

www.padippakam.com

# தமிழில் அயற்பேர்கள்

தமிழ்ப் பேச்சுவழக்கிலுள்ள அயற்சொற்களையும் அயற்பேர்களையும் தமிழில் எழுதுவதிலுள்ள சிரமம் பலரும் அறிந்ததே. இதற்கான சரியான தீர்வு இதுவரை காணப்படவில்லை. ஆயினும் இப் பிரச்சனை நாளுக்குநாள் மோசமாகி வருகிறது. அயற் சூழலில் நாம் வாழ்வதால் அயற் சொற்களும் பேர்களும் சரிவர எழுதப்படவேண்டிய தேவை அதிகமாகி விட்டது. எனவே அயற்சொற்கள் தமிழரால் சரியாக உச்சரிக்கப்படக்கூடிய விதமாக அவற்றை எழுதும் முறையொன்றைப் பனிமலரில் பயன்படுத்தவுள்ளோம்.

இது பனிமலரின் கண்டுபிடிப்பல்ல. எந்த ஒருவரது சாதனையுமல்ல. 1960களின் முடிவில் தமிழ்நாட்டில் 'கல்கண்டு' சஞ்சிகையும் பின்னர் 'துக்ளக்' சஞ்சிகையும் 'F' ஓசையைத் தமிழில் எழுத (ைFல்=File என்றவாறு) அதே ஆங்கில எழுத்தைப் பயன்படுத்தின. இதையே நீடித்த ஒரு நடை பிற ஓசைகட்காகவும் பல சஞ்சிகைகளில் பயன்படுத்தப்பட்டது. இவற்றை ஒழுங்குபடுத்திய ஒரு எழுத்து முறையைப் 'பனிமலர்' பயன்படுத்துகிறது. இப்போது மெய்யோசைகட்கு மட்டுமே இம்முறை கையாளப்படவுள்ளது.

இம்முறையின் தெரிவுக்கான ஒரு முக்கிய காரணம் அதிக விளக்கக் குறிப்புகளின் துணையில்லாமல் இதை எவரும் வாசித்து விளங்கலாம் என்பதாகும். 'பனிமலர்' இதை ஒரு இறுதித் தீர்வாகக் கருதவில்லை. இதைவிடச் சிறப்பான தீர்வொன்றைத் தமிழின் நவீனத்துவத்தில் அக்கறைகொண்டோர் கூடிப்பேசியும் கலந்தாலோசித்தும் காணமுடியும் என்பது 'பனிமலரின்' நம்பிக்கை. அதுவரையும் அதற்கு உதவும் வகையிலுமே 'பனிமலர்' இந்த நடவடிக்கையில் இறங்குகிறது. இந்த முயற்சியில் இன்னும் பயனுள்ள ஆலோசனைகளை எவரும் தரமுடியுமாயின், பனிமலர்' அவற்றை வரவேற்கும். இம்முறையிற் சில உச்சரிப்புப் பிரச்சனைகள் இல்லாமலில்லை. ஆயினும் இம்முறையினால் தீர்பவை இதனால் ஏற்படுவனவற்றினும் பன்மடங்கு அதிகமானவை. தேவையானபோது தமிழ்ச் சொற்களையும் அயற் சொற்களையும் வேறுபடுத்தி இனங்காணுமாறு அயற்சொற்கள் மேற்கோட்குறிகளுக்குள் (' ') தரப்படும்.

படைப்பாளிகளின் விருப்பம் இம்முறைக்கு மாறானதெனின் அவர்களது படைப்புகளில் அவர்கள் விரும்பியவாறே அயற்சொற்கள் அமையும். திரு. கருணாகரமூர்த்தியின் சிறுகதையில் நிறைய அயற்சொற்கள் வருவதால் அவரது கதையில் அவர் 'ரோமன்' எழுத்தில் எழுதிய அயற்பேர்களை எல்லாம் புதிய தமிழ் அயலெழுத்து முறையிற் தருகிறோம். திரு. கருணாகரமூர்த்திக்கு இதுபற்றி மறுப்பிராது என்ற நம்பிக்கையில் இதைச் செய்தோம். அவர் இதை விரும்பாவிடில் அவரது மன்னிப்பைக் கோருகிறோம்.

அயற்சொற்கள் இயன்றளவும் அவற்றுக்கு நாமறிந்தவரை சரியான உச்சரிப்புத் தருமாறு எழுதப்படும். தவறுகள் காணப்பட்டால் அதைத் தயவுசெய்து வாசகர்கள் சுட்டிக்காட்டுவார்களாக.

## எழுத்து முறைக்கான விளக்கம்.

*ஓசையும் எழுத்தும்*

| | | | |
|---|---|---|---|
| ka - க; | ga - G; | ha - ஹ; | n(g)a - ங |
| cha - ச; | ja - ஜ; | sa - ஸ; | (g)na - ஞ |
| da - ட; | ta - T; | Na - ண | |
| tha - த; | dha - D; | na - ன | |
| pa - ப; | ba - B; | ma - ம | |
| ya - ய; | ra - ர; | la - ல; | va - வ |
| La - ள; | Ra - ற; | na - ன | |
| sha - ஷ; | za - Z; | fa - F | |

ஓசைகள் வழமையான ஆங்கிலப் பிரயோகத்தில் வருமாறும் ra - Ra, la - La; ர - ற, ல - ள வேறுபாட்டைக் காட்டவும் பயன்பட்டுள்ளன.

*உயிர்மெய் எழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் வரும் விதம் (F - வரிசை)*

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| fa | faa | fi | fii | fu | fuu | fe |
| F | Fா | Fி | Fீ | Fு | Fூ | ெF |
| fei | fai | fo | foe | fau | f | |
| ேF | ைF | ொFா | ேFா | ெFள | Ḟ | |

(தமிழ் வழக்கிலுள்ள எழுத்துக்கள் தமிழில் உள்ளவாறே அமையும்.)

*சில அயற்சொற்களுக்கான உதாரணங்கள்*

| சொல் | வழமையானமுறை | புதியமுறை |
|---|---|---|
| Ghana | கானா | 'Gானா' |
| Toranto | ரொரான்டோ/டொரான்டோ | 'ொTாரான்ேTா' |
| Riyadh | றியாத்/ரியாத் | 'ரியாD' |
| Berlin | பேளின்/பேர்லின் | 'ேBர்லின்' |
| Zurich | ஸூரிக்/சூரிக்/ஜூரிக் | 'Zூரிக் |
| France | பிரான்ஸ்/ஃபிரான்ஸ் | 'Ḟரான்ஸ்' |



படிப்பகம்

www.padippakam.com

# மதராஸில் மழைபெய்தால்.

*சி.சிவசேகரம்*

மொஸ்கோவில் மழை பெய்தால் மதராஸில் குடை பிடிப்பார்கள் என்று தி.மு.க.வினர் கம்யூனிஸ்ட்டுகளைக் கேலி செய்ததொருகாலம். அவ்வாக்கியத்தில், மதராஸ் என்பதைக் கொழும்பு என்று மாற்றிச் சுதந்திரனில் தமிழரசுக் கட்சியினர் கேலி செய்தது சிலருக்கு நினைவிருக்கலாம். சர்வதேச அரசியலில் ஈடுபாடு கொண்ட கட்சிகளுக்கு, உள்நாட்டு விவகாரங்களிற்போல உலக விவகாரங்களிலும் அக்கறை இருக்கும். சோவியத்சார்போ, சீனச்சார்போ தம்மளவில் தேசத்துரோகமுமல்ல, தேசிய உணர்வின் குறைபாட்டின் அடையாளமுமல்ல. ஆயினும் அவை ஒருவரது அரசியற் பார்வையை மங்க வைக்குமானால் அது ஆபத்தானது. லெனினை ஜேர்மன் ஒற்றன் என்றும் மாஓவை சோவியத் கையாள் என்றும் எதிரிகள் வர்ணித்த காலங்கள் இருந்தன. ஆயினும், நடைமுறை, உண்மை வேறு என்று நிரூபித்தது.

"எல்லார்க்கும் சொல்லுமாம் பல்லி – காடிப்
பானைக்குள்ளே விழும் துள்ளி"

என்ற விதமாக, இடதுசாரிகளை ஏளனஞ்செய்த இலங்கைத் தமிழ்த் தேசியவாத அரசியற் தலைமை என்ன செய்தது? இலங்கையின் தமிழ்த் தேசியவாத அரசியல் இந்தியாவின் அரசியலின் நிழலாகவே செயற்படுகிற நிலைமையை நாம் இன்று அடிக்கடி காண்கிறோம். இதனாற்றான் தமிழ் இடதுசாரிகளால் மட்டுமே இலங்கையின் தமிழ்த் தேசியஇனத்தின் கலாச்சாரத் தனித்துவத்துக்காகத் தொடர்ந்துங் காத்திரமான குரலெழுப்ப முடிகிறது.

தமிழகத்திலும் இலங்கையின் மலையகத்திலும் இருந்த தமிழ்மக்கள்பற்றி அதிக அக்கறையோ மதிப்போ அற்ற தமிழ்த் தேசியவாதிகள், முதலில் இந்தியத் தேசியத்தை அடியொற்றியும் பின்னர் திராவிட இயக்கங்களைப் பின்பற்றியும் தமது அரசியலை வகுத்தனர். இடதுசாரிகளோ பிரச்சனைகளை வர்க்க அடிப்படையில் அணுகிச் சாதி, பிரதேச அடிப்படையிலான ஏற்றத் தாழ்வுகளை நிராகரித்தபோதும் இலங்கைத் தமிழ்மக்களது கலாசாரத் தனித்துவத்தை வலியுறுத்தினர். ப.ஜீவானந்தம் மிகவும் மதிப்புக்குரிய தமிழக இடதுசாரித் தலைவராகவும் சிறந்த பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் இருந்தபோதும் இலங்கையின் இடதுசாரிகள் ஜீவாவின் பாணியிலேயே தாமும் பேசவும் எழுதவும் முற்படவில்லை. மாறாகத் தமக்கென்றொரு பாதையை வகுத்துக்கொண்டனர். அதேவேளை தமிழ்த் தேசியவாதத் தலைமையில் ஒரு பகுதியினர் ஸி.என்.அண்ணாதுரை, மு.கருணாநிதி போன்றவர்களைப் பிரதிபண்ணி மேடைகளில் அடுக்குமொழியில் முழங்கவும் பத்திரிகைகளில் எழுதவும் முனைந்தனர். இவர்கள்போன்றே மலையகத்திலும் இந்தியத் தேசியத் தலைமையை வழிபடும் ஒரு போக்கும் திராவிட முன்னேற்றக் கழகச் சார்பான போக்கும் காணப்பட்டன.

இந்தியாவின் தேசியத் தலைவர்களான காந்தி, நேரு போன்றோரைப் பின்பற்றியும் சுதந்திரத்திற்கு முந்திய இலங்கையில் தேசியவாதிகள் செயற்பட்டது உண்மை. இது ஒரு வரலாற்றுச் சூழலின் விளைவு. இலங்கையில் ஏற்பட்ட தேசிய இயக்கமே ஒரு 'காங்கிரஸ்' ஆக இருந்தது. அதன் பிளவை அடுத்து தமிழ்க் காங்கிரஸும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் ஏற்பட்டதும் அதன் வரலாற்றுத் தொடர்ச்சிகளே. இந்தியத்தேசிய விடுதலை இயக்கத்தின் வேகம் தென்னிந்தியத் தமிழரின் தேசிய வாதத்தின் வளர்ச்சியை மறித்தது. தமிழ்த் தேசியவாதம், இதன் விளைவாகப், பிராமணிய எதிர்ப்பு, சீர்திருத்தவாதம் (பகுத்தறிவு இயக்கம்) போன்ற வடிவங்களை எடுத்தது. காங்கிரஸிற்கு விரோதமான தமிழ்த்தேசிய சக்திகள் பிரித்தானிய கொலனித்துவத்தின் துணையை நாடியதும் கொலனித்துவம் இந்தியாவின் தேசிய விடுதலையைப் பிளவுபடுத்த நீதிக்கட்சியைப் பயன்படுத்த முயன்றதும் உண்மை. எவ்வாறாயினும் இந்தியாவினதும் தமிழகத்தினதும் (அப்போது சென்னை மாநிலம்) பிரதான போக்கு காங்கிரஸ் தலைமையிலான இந்திய விடுதலை இயக்கமாதலால், காந்தியம், காங்கிரஸ் போன்றவை இலங்கைத் தமிழ்த் தலைவர்கட்கு



விருப்புடையனவாக இருந்தன. மலையக மக்களின் பின்தங்கிய நிலையும் அவர்கள் இந்திய மண்ணிலிருந்து இலங்கையின் மற்றத் தமிழரைவிடப் பின்னரே வந்தமையும், அவர்களிடையே இந்தியாவுக்கும் காங்கிரஸுக்கும் விசுவாசமான ஒரு போக்கை வளர்த்து, அதன் அடிப்படையில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமை தன் செல்வாக்கை நிலைநிறுத்த உதவின.

தமிழகத்தில் திராவிடர் இயக்கம் ஓரளவு வளர்ந்து, தி.மு.க. ஒரு முக்கியமான அரசியற் சக்தியாகத் தன்னை வளர்த்துக் கொண்டதையொட்டி, இலங்கையிலும் அதைப் பின்பற்றும் போக்குக்கள் வளர்ந்தன. தி.மு.க.வின் 'பகுத்தறிவுவாதம்' சில இளைய பரம்பரையினரைக் கவர்ந்தது. கருணாநிதி, சிவாஜி கணேசன், எம்.ஜி.ராமச்சந்திரன் போன்றோர் மூலம் ஏற்பட்ட சினிமாக் கவர்ச்சியும் அன்றைய இளைய பரம்பரையினரிடையே தி.மு.க பற்றிய அக்கறையை ஊட்டியது. இச்சூழலில், தமிழரசுக்கட்சியின் இளம் அரசியற் பேச்சாளர் பலர் அண்ணாதுரையையும் கருணாநிதியையும் பின்பற்றிப் பேசவும் எழுதவும் முற்பட்டனர். எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துக்குச் சொந்தமான சுதந்திரன், தமிழ்க் காங்கிரஸில் அவர் இருந்தபோது நாளேடாக நடத்தப்பட்டு வார ஏடாக மாறியது. தமிழரசுக்கட்சி தோன்றிய பிறகு, சுதந்திரன், தமிழரசுக் கட்சியின் (அதிகாரபூர்வமற்ற) பிரசார ஏடாகிற்று. சுதந்திரனில் தி.மு.க. அனுதாபமான போக்கு 1950களின் பிற்பகுதியிற்



படிப்பகம்

www.padippakam.com

காணப்பட்டது. எஸ்.ரி.சிவநாயகம் ஆசிரியர் பதவியினின்று விலகிப் பின்னர் கோவை மகேசன் பொறுப்பேற்ற காலத்தில் அப்பட்டமாகவே தி.மு.க. பணியிலான எழுத்துநடை சுதந்திரனில் ஆதிக்கம் பெற்றது. இவ்வாறான மாற்றங்கள் தற்செயலானவையல்ல. ஒரு அரசியல் முனைப்பின் பிரதிபலிப்பாகவே இவை அமைந்தன. தி.மு.க. வுக்கும் இலங்கைத் தமிழ்த் தேசியவாதிகட்குமிடையிலான நெருக்கத்தின் வளர்ச்சி, சில அரசியல் வரலாற்று ஒற்றுமைகளுடன் தொடர்புடையது. இரண்டு கட்சிகளினதும் வர்க்க நிலைப்பாடுகளும் அதில் முக்கிய பங்களித்தன.

ஹிந்தி ஆட்சி மொழியாகியதையும் ஹிந்தித் திணிப்பையும் எதிர்ப்பதில் தமிழகத்தில் தி.மு.க. முன்நின்றதுபோல சிங்கள மொழிச் சட்டத்திற்கு தமிழரசுக்கட்சியே முக்கிய எதிர்ப்புச் சக்தியாக இருந்தது. 'ஆரிய' விரோத அரசியல் பேசிய தி.மு.க., தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கட்சியை வடநாட்டாரின் எடுபிடிகளாகக் காட்டியது. இலங்கையில் தமிழ்க் காங்கிரஸ் யூ.என்.பி.யின் எடுபிடி எனும் குற்றச்சாட்டுக்கு உள்ளானது. இரண்டு இயக்கங்களும் இடதுசாரிகளை இனவிரோதிகளாகக் காட்டுவதில் முனைப்புடன் செயற்பட்டன. சாதிப்பிரச்சனையில் தி.மு.க. கடுமையான பிராமண விரோதப் போக்குடன் தொடங்கியபோதும் காலப்போக்கில் அதைச்சிறிது தளர்த்திக் கொண்டது. தாழ்த்தப்பட்ட சாதியினரின் பிரச்சனையை அது பிரசாரத்திற்குப் பயன்படுத்தினாலும், அரசியல்ரீதியாக அவர்களை அணிதிரட்ட அது தவறியமைக்கு அதன் தலைமை பிராமணரல்லாத உயர் சாதியினரின் கையில் இருந்தது ஒரு காரணம் எனக் கூறப்பட்டாலும், தி.மு.க., தமிழரசுக்கட்சியினளவுக்குச் சாதிப்பிரச்சனையில் தலையிடத் தயங்கவில்லை என்பது உண்மை. வட இலங்கையில் சாதித்தடிப்பின் பிரதிநிதியாக தமிழ்க் காங்கிரஸ் இருந்ததால் தமிழரசுக்கட்சியால் ஒப்புக்கேனும் சாதிவேறுபாட்டுக்கு எதிராகக் குரல்கொடுக்க முடிந்தது. தி.மு.க.வும் தமிழரசுக் கட்சியும் 'தனித்தமிழ்' என்ற கோஷத்திலும் சம்பந்தப்பட்டன. இவர்களது தனித்தமிழியக்க நடைமுறைகள் வெவ்வேறு முறைகளில் அமைந்தபோதும் இரண்டு தலைமைகளும் ஹிந்தி எதிர்ப்பு, சிங்கள எதிர்ப்பு என்ற விஷயங்களிற் காட்டிய அக்கறையை ஆங்கிலந் தொடர்பாகக் காட்டவில்லை. இரண்டு கட்சிகளிடையிலும் இருந்த மேலோட்டமான ஒற்றுமையும் வர்க்கச் சார்பும் ஒருபுறமிருக்க, அவற்றின் பாராளுமன்ற அரசியற் சந்தர்ப்பவாதம் வசதிக்காகக் கொள்கைகளைக் கைகழுவும் முறையிலேயே அவற்றை உந்தியது. தி.மு.க. 1962இல் பிரிவினைவாதத்தைக் கைவிட்டதுபோலவே 1965இல் தமிழரசுக்கட்சி மொழிப்பிரச்சனையைக் கைகழுவி யூ.என.பி.யின் பங்காளியாயிற்று. இரண்டு கட்சிகளும் தமக்கு அரசியல் நெருக்கடி ஏற்படும்போது மொழி, தேசிய உரிமை தொடர்பான போராட்டங்களைப் பற்றி முழங்கத் தவறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையிலும் தமிழகத்திலும் சமுதாயப் பிரச்சனைகளில் பூரணமான ஒற்றுமை இல்லாவிடினும் சிறுபான்மையினரான இரண்டு தேசிய இனங்களின் பிரச்சனைகள் என்ற வகையில் சில அரசியல் ஒற்றுமைகள் இருந்தன. இவை மட்டுமன்றி மொழி, கலாச்சாரம் என்ற அடிப்படையில் இரண்டு தமிழ்ப் பிரதேசங்களுக்குமிடையில் இருந்த உறவும் இரண்டு நாடுகளின் தமிழ்த் தேசியவாதிகளிடையே பரஸ்பர அனுதாபத்திற்கு வழி செய்தது. இலங்கைத் தமிழரின் அரசியற் தலைமை தமிழரசுக் கட்சியின் கைக்கு 1956இல் வந்தபோது, இந்திய அரசுடன் தமிழரசுத் தலைமைக்கு இருந்த நல்லெண்ணம், திராவிட இயக்கங்களுடன் அன்றைய இளைய தலைமுறைத் தலைவர்கள் சிலருக்கு இருந்த இணக்கத்தைவிட வலியதாகவே இருந்தது. இந்தியா பற்றிய எதிர்பார்ப்புக்கள் இலங்கைத் தமிழ்த் தேசியத் தலைமையிடம் மட்டுமன்றித் தமிழ் மக்களிடையிலும் பரவலாக இருந்தன. 1962இல் சீன-இந்திய எல்லைத் தகராற்றில் ஸ்ரீ.ல.சு.கட்சி அரசாங்கம் நடுநிலை வகித்தது. இடதுசாரிகள் எவரும் இந்தியாவை ஆதரிக்காவிடினும், ல.ச.ச.கட்சி நடுநிலை வகித்தது. யூ.என்.பி.யின் கம்யூனிஸ விரோத நோக்கம் சீனாவுக்கு மாறான நிலைப்பாட்டை எடுக்குமாறு அதைத் தூண்டியது. இலங்கையின் பொருளாதாரக் கொள்கையிலும் அயல்நாட்டுக் கொள்கையிலும் அதிக அக்கறை இல்லை என்று எப்போதுமே தன்னை வசதியாக ஒதுக்கிக்கொண்ட தமிழரசுக்கட்சியோ, யூ.என்.பி யை விட உக்கிரமாகச் சீனாவைக் கண்டித்தது.

தமிழ் மக்கள் மத்தியில் இந்தியா பற்றிய எதிர்பார்ப்புக்களும் இடதுசாரிகட்கு விரோதமான உணர்வுகளும் சீனா பற்றிய குரோதமும் தமிழரசுத் தலைமையாலும் அதன் பிரசார ஏடுகளாலும் ஊட்டப்பட்டன. காலப்போக்கில் தி.மு.க. வுடன் தமிழரசுக்கட்சி (பின்பு கூட்டணி) வளர்த்துக்கொண்ட உறவு, இந்திய அரசுடன் (முக்கியமாக காங்கிரஸ் ஆட்சியுடன்) தன் நேசத்தை அதிகம் பாதிக்காதவாறு தமிழர் தலைமை கவனித்துக் கொண்டது. 1960களின் பிற்பகுதி வரையில் தி.மு.க.வுக்கும் தமக்கும் பகிரங்கமான எந்த உறவும் இருப்பதை அவர்கள் அனுமதிக்கவில்லை. இதற்கு ஒரு காரணம் சிங்கள இனவாதிகள் சமஷ்டிக் கோரிக்கையைப் பிரிவினையுடன் சமன்படுத்தித் தமிழரசுக்கட்சியும் தி.மு.க.வும் சிங்களவர்கட்கெதிரான ஆக்கிரமிப்பிற்குத் திட்டமிடுகிறார்கள் என்று பிரசாரம் செய்து வந்ததாகவும் இருக்கலாம். எவ்வாறாயினும் தமிழகத்தின் அரசியலுடன் தமிழ்த் தேசியத்தலைமை தன்னை வெளிவெளியாகத் தொடர்புபடுத்தத் தயாராக இருக்கவில்லை. அதேவேளை, தமிழரசுக் கட்சிக்குள்ளும் அதன் தொடர்ச்சியான கூட்டணிக்குள்ளும் தி.மு.க.வுக்கு அனுதாபமான போக்குகளின் வளர்ச்சியை அவர்கள் தடுக்க முயலவில்லை. தமிழரசுத் தலைமையின் இயலாமை 1965-69இல் யூ.என்.பியுடன் அது இணைந்ததையடுத்து மேலும் வெளியாயிற்று. 1970களில் தமிழரசுத் தலைமையின் அரசியல் மிகவும் நெருக்கடிக்குள்ளான சூழ்நிலையில் தமிழ் ஈழப் பிரிவினை பற்றிய சிந்தனை அதன் ஒரு பகுதியினரால் மெல்ல ஊக்குவிக்கப்பட்டது. இக் காலச் சூழலில் இந்திய அரசியலும் மிகுந்த நெருக்கடிக்குள்ளானது. இந்திரா காந்தியின் சர்வாதிகார அரசியலும் தி.மு.க.வில் ஏற்பட்ட பிளவும் அ.தி.மு.க.வின் தோற்றமும் தமிழரசுக்கட்சி/கூட்டணித் தலைமைகட்கு இக்கட்டான நிலையை உண்டாக்கியபோதும் தி.மு.க. வுடன் அவர்களது அனுதாபம் வளர்வதற்கான வாய்ப்புக்கள் தொடர்ந்தன. 1977இல் இந்திரா காந்தியின் தோல்வியையொட்டி ஏற்பட்ட மொரார்ஜி தேசாய் தலைமையிலான ஜனதா ஆட்சி, இலங்கைத் தமிழர்கள் பற்றிய அனுதாபமேயற்ற ஒரு வலதுசாரி ஆட்சியென்று 1977 இனவாத வன்முறையின்போது தன்னை இனங்காட்டிக் கொண்டது. யூ.என்.பி தலைமை 1977 இல் தம் தேர்தல் வெற்றிக்கு முன்பிருந்தே இந்திரா காந்திக்கும் காங்கிரஸ் ஆட்சிக்கும் எதிரான கருத்துக்களை வெளிப்படுத்தியது. ஸிரிமா பண்டாரநாயக்க ஆட்சிக்கும் இந்திரா காந்தி ஆட்சிக்குமிடையில் சர்வதேச விவகாரங்களில் பல கருத்துவேறுபாடு இருந்தாலும் தமது உள் விவகாரங்களில் அமெரிக்க மேலாண்மைக்கெதிரான முனைப்பு இரண்டு அரசாங்கங்கட்குமிடையில் ஒரு பொது அம்சமாக இருந்தது. யூ.என்.பி. அரசாங்கம் 1977இல் அதிகாரத்துக்கு வந்ததும், எதிர்பார்த்தவாறே அதற்கும் மொரார்ஜி தேசாய் தலைமையிலான ஜனதா அரசாங்கத்துடன் சுமுகமான உறவு ஏற்பட்டது. ஜனதா அரசாங்கம் உட்கட்சிப் பூசல்களால் தன்னை அழித்துக்கொள்ள அதிக காலம் எடுக்கவில்லை. 1979இல் இந்திரா காந்தியின் மீட்சியின் பின்னும் யூ.என்.பி. அரசு தன் தவறான அரசியல் முனைப்பைத் தொடர்ந்தது. இந்தியாவைப் பகைத்து அமெரிக்க மேலாதிக்கத்தை இலங்கையில் நிலைநிறுத்துமாறான பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனவே இந்திரா காந்தி தலைமையிலான அரசு யூ.என்.பி அரசின்பால் சிநேகம் பாராட்டாமை அதிசயமில்லை.

1977இல் இனவாத வன்முறையின்போது மொரார்ஜி அரசாங்கம் நடந்த விதத்துக்கும் 1983இல் இந்திரா காந்தி அரசாங்கம் நடந்த விதத்திற்கும் உள்ள வேறுபாடு சிறியதல்ல. ஆயினும் தமிழ்த் தேசியவாதிகள் இந்திரா அரசாங்கத்தின்மீது



படிப்பகம்

www.padippakam.com

அளவு மிகுந்த நம்பிக்கை வைத்தனர் என்பது உண்மை. 1983 வரை, தமிழக அரசியற்கட்சிகள்மீதும் இந்திய அரசாங்கத்தின்மீதும் நம்பிக்கை வைத்திருந்த தமிழ்த் தேசியவாதத் தலைமை, இந்திய தமிழக அரசியலில் நேரடியாகத் தன்னை ஈடுபடுத்தத் தயங்கியது. 1983 வன்முறைக்குப் பின் இந்தியா இலங்கையின் தேசிய இனப் பிரச்சனையில் காட்டிய 'அக்கறை' இந்த நிலைமையை முற்றாகவே மாற்றிவிட்டது.

இந்தியாவின் அக்கறைபற்றிச் சற்று விரிவாக 1989இல் 'கனிவுமில்லைக் கருணையுமில்லை' என்ற கட்டுரையில் எழுதியிருந்தேன். இந்தியாவும் விடுதலை இயக்கங்களும் பற்றி மேலும் விரிவாக எழுத இங்கு இடவசதி இல்லை. அது பற்றிப் பல கட்டுரைகள் இப்போது பலராலும் எழுதப்படுகின்றன. அவ் விடயத்தை விரிவாக ஆராய இன்னொரு வாய்ப்புக் கிடைக்கும் என நம்புகிறேன். 1987 இந்திய-இலங்கை உடன்படிக்கைக்கு முன்னும் பின்னும் ஒவ்வொரு முன்வரிசை விடுதலை இயக்கமும் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியும் மட்டுமன்றிப் பல தமிழ் அரசியல் அவதானிகளும் இந்திய அரசினதும் தமிழ்நாட்டு அரசியலினதும் அடிப்படையிலேயே தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் பற்றிய முடிவுகளை அடைந்தனர் என்பது வருந்தத்தக்கது.

தமிழ்த் தேசியவாத சக்திகளிடையே பிளவுகள் பெருகுவதற்கு இயக்கங்களின் அகக் காரணங்களும் இந்திய அரசாங்கத்தின் குறுக்கீடும் உதவின. இதைவிட, இந்திய அரசாங்கத்தினதும் தமிழக அரசியற் கட்சிகளதும் தயவை நாடுவதில் இயக்கங்களிடையிலான போட்டியும் முக்கிய இயக்கங்களைத் தமது தேவைக்குப் பயன்படுத்தத் தமிழக அரசியற் கட்சிகளின் முயற்சியும் முழு விடுதலை இயக்கத்தையும் தன் ஆளுமைக்குள் உட்படுத்தும் இந்திய அரசாங்கத்தின் நோக்கமும் நிலைமையை மேலுஞ் சிக்கலாக்கின. இந்திய-ஈழ விடுதலை அரசியற் சதுரங்கத்தில் காய்கள் நிறம் மாறுவதும் விளையாட்டின் விதிகள் திடீரென்று மாறுவதும் பற்றி அதில் இறங்கித்தான் ஒருவர் அறியவேண்டியதில்லை. எவ்வாறாயினும், இந்திய அரசாங்கத்துக்கும் விடுதலை இயக்கமொன்றுக்கும் இடையில் இருந்த உறவோ தமிழக அரசியற்கட்சி ஒன்றுக்கும் முக்கிய விடுதலை இயக்கமெதற்கும் இருந்த உறவோ, இந்திய மேலாதிக்க நலன்களையும் இயக்கங்களின் உடனடியான அரசியல் ஆதாயத்தையும்விட முக்கியமாக வேறெதையும் கணித்ததாகக் கூறமுடியாது.

சில சிறிய விடுதலை இயக்கங்கட்கும் தமிழகத்தின் தீவிர இடதுசாரிக் குழுக்குழுக்குமிடையில் இருந்த உறவில் அரசியற் சித்தாந்த ஒற்றுமை முக்கியமான பங்கு வகித்தது போன்று இல்லாவிடினும் திராவிடர் கழகம் போன்ற தீவிரமான தமிழ்த் தேசியவாத சக்திகட்கும் விடுதலைப் புலிகட்கும் இடையிலான இணக்கத்தில் அரசியல் உடன்பாடு ஒரு பங்கு வகித்தது. பிரதான தமிழக இடதுசாரிக்கட்சிகள் பிரிவினைக் கோரிக்கை பற்றிய தமது நிலைப்பாட்டின் காரணமாகவும் அரசியல் உடன்பாடின்மையாலும் தமிழீழ விடுதலை இயக்கங்களிடமிருந்து ஒதுங்கி நின்றன. தமிழக காங்கிரஸ், அ.தி.மு.க.வுடனும் தி.மு.க.வுடனும் போட்டியிட முடியாமையாலும் டில்லியுடனேயே முக்கிய தமிழீழ விடுதலை இயக்கங்களினதும் கூட்டணி அரசியல் தலைமையினதும் பேரங்கள் இருந்ததாலும் குறிப்பாக எந்த இயக்கத்துடனும் தம்மை இனங்காட்டிக் கொள்ளவில்லை.

தமிழக மக்கள் மத்தியில், முக்கிய நகரங்களில், இலங்கையின் தமிழர் பிரச்சனை பற்றிய அனுதாப அலை வடியும் விதமாக இயக்கங்களும் ஓரளவு வசதி படைத்த தமிழரும் நடந்து கொண்டதால் தமிழீழ விடுதலைக்கு ஆதரவு என்ற அரசியல் மந்திரம் தமிழ் நாட்டிற் தேர்தலில் வாக்குகளை வரவழைக்கும் வலிமையை இழக்கத் தொடங்கியது. ஆயினும் 1987இல் இந்திய இராணுவம் இலங்கையில் அடியெடுத்து வைத்த பின்பு, இந்திய ராணுவத்தின் நடத்தை பரந்துபட்ட அளவில் தமிழக மக்களால் வெறுக்கப் பட்டது. இதன் விளைவாகவே பத்திரிகைகளில் காங்கிரஸ் அரசாங்க அனுதாபிகளையும், இலங்கைத் தமிழர் மீது அனுதாபமற்ற 'சோ' ராமசாமி போன்ற பத்திரிகையாளர்களையும் தவிர்ந்த மற்றோர் ஓரளவு நடுநிலையாகவே செயற்பட்டனர். பத்மநாபாவும் ஈ.பி.ஆர்.எல்.எஃ பிரமுகர்களும் கொலை செய்யப்பட்டபோதும் கருணாநிதி தலைமையிலான தி.மு.க. ஆட்சியினால் விடுதலைப் புலிகளுடனான சுமுக உறவைப் பேண முடிந்தது. ஜெயலலிதாவும் அ.தி.மு.க.வும் விடுதலைப் புலிகளுடைய தயவை நாடினர். ராஜீவ் காந்தியின் கொலை, நிலைமையை முற்றாகவே மாற்றிவிட்டது. இந்திய மண்ணில் ஒரு முக்கிய இந்திய அரசியற் தலைவரைக் கொலை செய்ததை அந்த அரசியற் தலைவருடன் முரண்பட்டவர்களாற்கூட ஏற்றுக் கொள்ளமுடியாதுள்ளது என்ற உண்மையை விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் பலரால் இன்னமும் விளங்கிக் கொள்ள இயலவில்லை.

1987க்குப் பின் இந்தியாவின் நோக்கங்கள் அம்பலமாகி, இந்திய ராணுவமும் ஒரு அடக்குமுறை ஆட்சியின் கருவியே என்பதை ஈழத்தமிழர் அறிந்து அனுபவித்த பின்னருங்கூட விடுதலை இயக்கங்களின் அரசியலில் இந்தியாவிலும் தமிழ் நாட்டிலும் நடக்கும் நிகழ்வுகள் மிகையான அழுத்தம் கொண்டுள்ளன. ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பின் இந்தப் போக்கு மேலும் மோசமாகியுள்ளது. விடுதலைப் புலிகளும் எம்.ஜி.ராமச்சந்திரனும் நெருக்கமாக இருந்த காலத்தில் தமிழகத்தில் அ.தி.மு.க.வின் கை ஓங்குகிறதா தி.மு.க.வின் கை ஓங்குகிறதா என்ற விடயம்பற்றி முக்கிய இயக்கங்களோ அரசியல் அவதானிகளோ அதிகம் கவலைப்படவில்லை. ஏனெனில் எம்.ஜி.ஆர். டெல்லியின் செல்லப் பிள்ளையாக இருந்த அதேவேளை இந்திய அரசாங்கத்துடனேயே விடுதலைப் புலிகளின் பிரதான போட்டி இயக்கங்கள் தம் உறவுகளை வைத்துக்கொண்டனர். தமிழீழக் கோரிக்கையில் இந்திரா காந்தியின் வேஷம் கலையுமுன்னமே அவர் கொலைக்குள்ளானார். ராஜீவ் காந்தியின் வருகை இந்திய அரசின் அடுத்த கட்டத் திருப்பத்திற்கு வசதி செய்தது. ஆயினும் ராஜீவ் காந்தியுடனோ அ.தி.மு.க ஆட்சியுடனோ தங்களது முரண்பாடுகளைப் பகிரங்கப்படுத்திப் பேசக்கூடிய நிலையில் எந்த இயக்கமும் இருக்கவில்லை. அவர்கட்கு அனுதாபமான அரசியல் அவதானிகளும் தமது அதிருப்தியைக் கவனமாகவே வெளிப்படுத்தினர். 1987இல் இந்தியாவின் தலையீடு இந்த முரண்பாடுகளைக் கூர்மையடையச் செய்தது. அ.தி.மு.க.வுக்கும் காங்கிரஸ் அரசுக்குமிடையிலான நெருக்கம், எம்.ஜி.ராமச்சந்திரனுடைய மரணத்தையடுத்து தி.மு.க. ஆட்சிக்கு வந்தபின், விடுதலைப் புலிகட்கும் தி.மு.க. வுக்குமிடையில் நெருங்கிய உறவை உருவாக்கியது. இவ்வளவு எளிதாக முறியவும் இணையவுங்கூடிய இந்த உறவுகள் முழுக்க முழுக்கக் குறுகியகால அரசியல் ஆதாயத்தையும் சந்தர்ப்பவாதத்தையுமே அடிப்படையாகக் கொண்டவை என்பதை அறிய அரசியல் ஞானம் அதிகம் வேண்டியதில்லை.

இந்திரா காந்தி தமிழீழ விடுதலையை அல்லது தமிழர் உரிமைகளையேனும் வென்று தருவார் என்ற பிரமையை





படிப்பகம்

www.padippakam.com

வளர்ப்பதில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியும் இந்திய அரசாங்கத்தினால் ஊட்டம்பெற்ற இயக்கங்களும் பங்கு வகித்தன. இந்தியா ஈழப் பிரச்சனைபற்றி அக்கால கட்டத்திற் காட்டிய கரிசனை, மேலோட்டமாகப் பார்க்கும்போது, இவர்களது நம்பிக்கையை நியாயப்படுத்தியதெனலாம். இத் தவறான கணிப்பீடு ஒரு தவறான அரசியல் நிலைப்பாட்டின் விளைவு என்றுஞ் சொல்லலாம். ராஜீவ் காந்தி அதிகாரத்துக்கு வந்த பின்னும் இந்தப் பிரமை கலையவில்லை. இந்தியாவின் கைப்பொம்மைகளாகிவிட்ட சில இயக்கத் தலைமைகள் இந்த மயக்கத்தை மேலும் நீடித்தன. அதைக் கலைப்பதில் விடுதலைப் புலிகளுக்கும் அதிகம் ஆர்வம் இருக்கவில்லை. ஏனெனில் இந்திய அரசுடன் பகைத்துக் கொள்வதற்கு அவர்களது தலைமையால் இயலவில்லை. இந்திய ராணுவத்தின் ஈழ வருகை இயக்கங்களின் நிலைப்பாடுகளிடையே முரண்பாடுகளை மீண்டும் கூர்மையாக்கியது. இதன் பின்னர் தமிழகத்தின் அரசியல் ஏற்ற இறக்கங்களில் தமது ஏற்ற இறக்கங்களை நேரடியாகவே தரிசிக்கும் நிலைமை இயக்கங்கட்கு ஏற்பட்டது. இதன் விருத்தியை இன்று இயக்க அனுதாபமுடைய அரசியல் அவதானிகளது கருத்துக்கள் காட்டுகின்றன. ஒவ்வொரு பிரச்சனையிலும் முக்கிய இயக்கங்கள் எடுக்கும் நிலைப்பாடுகளிலும் இவை பிரதிபலிக்கின்றன.

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் கருணாநிதியின் எழுச்சிக்கு ஏங்குவதும் ஜெயலலிதாவின் மீதான அதிருப்தி வளர்வது பற்றி அகமகிழ்வதும் கண்கூடு. விடுதலைப் புலிகளின் எதிராளிகள் ஜெயலலிதாவின் அதிகார வலிமை கருணாநிதியையும் அவரைச் சார்ந்தோரையும் பழி வாங்குவதையிட்டு உள்ளூர மகிழ்வதும் அதே அளவு தெளிவு. பிரேமதாஸ மீதான பதவி விலக்கற் பிரேரணையை ஆதரிக்கும் அறிக்கையிற்கூட ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைமை இந்திய நலன்கள் பற்றிய ஒரு வசனத்தைப் புகுத்துகிறது. மனிதஉரிமை மீறல்கட்காக விடுதலைப் புலிகளை விமர்சிக்கிறவர்கள் தி.மு.க.வினர் மீது ஜெயலலிதா எடுக்கும் நடவடிக்கைகளின் கொடுமையையும் பழிவாங்கும் நோக்கத்தையும் அதிகாரத் துஷ்பிரயோகத்தையும் அங்கீகரிக்கும் முறையில் கருத்துத் தெரிவிக்கிறார்கள். இதனால் எல்லாம் யார் நன்மை அடைகிறார்கள்?

கருணாநிதியோ தி.மு.க.வோ தமிழகத்து மக்களின் ரட்சகர்களல்லர். ஈழத்தமிழர் நிலைபற்றி அவர்கட்கு உண்மையான அக்கறையுமில்லை. அதேவேளை ஜெயலலிதாவின் சர்வாதிகார ஆட்சியின் நடவடிக்கைகள் ஈழத் தமிழ் அகதிகளைப் பாதிக்கின்றன. தாழ்த்தப்பட்ட சாதியினரின் நலன்களை நிராகரிக்கின்றன. தமிழகத்தில் பிற்போக்குவாதிகளும் அரசியற் குண்டர்களும் ஊழல் மன்னர்களும் எழுச்சி பெற்றுள்ளனர். தமிழக அரசியலை தி.மு.க.-அ.தி.மு.க. மோதலாகவே பார்க்கும் போக்கினின்று நமது அரசியல் அவதானிகள் விடுபடவேண்டும். அதைவிட இந்த அதிகாரப் போட்டியை ஈழத் தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டம் தொடர்பான தமது விருப்பு வெறுப்புக்களின் நிழலாட்டமாகக் காண்பதைத் தவிர்க்க வேண்டும். தமிழக மக்களின் நலன்கட்கு விரோதமான எந்த நடவடிக்கையையும் கண்டிக்கத் தவறுவோர் தமிழக மக்களிடமிருந்து ஆதரவை எதிர்பார்க்க அருகதையற்றோராவர். ஒடுக்கப்பட்ட தமிழக மக்களின் நலன்களையும் இனவிடுதலை வேண்டும் ஈழத்தமிழரின் நலன்களையும் ஒன்றுசேர்த்துக் கருதுவதோடு அவற்றுக்கான போராட்டங்கள் ஒன்றையொன்று ஆதரிக்கச் செய்வதும் அவசியம். இனியேனும், தமிழகத்தின் ஊழல் அரசியலுக்கும் திசை தவறிய தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கும் இடையே அகப்பட்டுத் தத்தளிக்கும் மக்களது விமோசனம்பற்றி நமது அரசியல் அவதானிகள் கூடிய கவனங்காட்டுவார்களா?

**கண்கள்**



*அந்தக் கண்களைக்*
*கவனித்திருப்பீர்கள்*

*ஆளரவமற்ற வீதிகளில்*
*அலைகின்ற இந்தப் பெண்களின்*
*கண்கள் அவை*

*அந்தக் கண்களில்*
*காமத் தீ*
*கொழுந்து விட்டெரிகிறதாய்*
*நம்புகிற மூடர்களே!*

*ஒவ்வொரு ஆணையும்*
*அவள் இறுக அணைக்கையில்*
*ஒரு கொலையைப் புரிகிறாள்.*

*புரியவில்லையா?*

*நீங்கள் எதையுமே*
*நம்புவதில்லை*

*அந்தக் கணங்களில்*
*ஒவ்வொரு தடவையும்*
*உங்கள் சிறுமையை*
*நீங்களே உணர்வீர்.*

*'பிச்சை' என இரந்து*
*பிறகும் பணம் கொடுத்து*
*இச்சை தீர்த்தாலும்-*

*அந்தக் கண்களிலே*
*எரிகின்ற தீயதனை*
*அறியாத மூடர்கள் நீர்.*

*என்றோ*
*உலகப் பந்தின்*
*ஒவ்வோர் பரப்பையும்*
*சமனென நீங்கள்*
*நிறுவுவீராயின்-*

*மனிதர் அனைவரும்*
*சமமென உம்மால்*
*நிறுவ முடியுமெனில்-*

*அப்போது மட்டுமே*
*அந்தத் தீயை*
*உணர்வீர் நீவிர்.*

**இளவாலை விஜயேந்திரன்**



படிப்பகம்

www.padippakam.com

ஒரு அரண்மனைக்குரிய கம்பீரத்தைக் கொண்டிருந்தும் பல காலமாகவே பேர்லினில் கைவிடப் பட்டிருக்கும் சார்லொட்டென்பேர்க் ரயில் நிலையம் கிழக்கு மேற்காகத் தொடரும் சிறு பள்ளத்தாக்கில் உள்ளது. பள்ளத்தாக்கின் இரு புயங்களையும் இணைக்கும்படி குறுக்காக 2ம் உலகப் போரிலும் சிதைவுறாத பாரிய இருப்புப் பாலம். பாலத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் வெண்கலத்தில் வடிக்கப்பட்ட 'கைசர் ஃப்ரீட்றிஹ்'உம் 'வில்ஹெல்ம் ஃப்ரீட்றிஹ்'உம் கம்பீரத்துடன் நிற்கிறார்கள்.

பாலத்தில் தொடர்வது கைஸர்டாம் வீதி. நாலு ஒழுங்கை அகலம், எப்போதும் பிஸி. பள்ளத்தாக்கின் தெற்குப்புறத்தில் கிழக்கு நோக்கிவரும் 'ட்றெஸ்ஸெல்' ரோடு பாலம் கடந்து வரும் 'கைஸர்டாம்' வீதியைச் செங்கோணத்தில் சந்திக்கும்.

ட்றெஸ்ஸெல் வீதி 8ம் நம்பரில் உள்ள எனது அப்பாட்மென்டின் வடக்குப் பார்த்த வசிக்கும் அறையின் ஜன்னலிலிருந்து சாதாரண கமெரா ஒன்றின் மூலம் பள்ளத்தாக்கின் கணிசமான பகுதி, இருப்புப்பாலம், பத்து மேடைகளுடன் ஸ்டேசன் முழுவதும் அடங்கும்படியாகப் படம் பிடிக்கலாம்.

மொஸ்கோ, வார்சாவிலிருந்து பேர்லினூடாக பாரிஸ், ஸூரிக், ரோம் போகும் யூரோசிற்றி, இன்டர்சிற்றி ரயில்கள் தரித்துப்போக பேர்லினில் இப்போ விலங்குகாண்கூட ஸ்டேசனைப் பயன்படுத்துகிறார்கள். தவிரவும் ஏழு நிமிடத்திற்கு ஒரு தடவை வரும் பேர்லின் நகர உள்ளூர்சேவை மின்ரயில்கள்கூட சார்லொட்டென்பேர்க் நிலையத்தில் நிறுத்தப்படுவதில்லை. பேர்லின் நகரம் துண்டாடப்பட்ட (1963) காலத்திலிருந்தே இந்த ஸ்டேசனை மூடிவிட்டார்களென பாலத்தையொட்டி 'கியோஸ்க்' வைத்திருக்கும் கிழவி சொன்னாள்.

பனிமூட்டமுள்ள காலங்களில் வேகமான யூரோசிற்றி ரயில்களின் விரைவும் ஏராளமான சிக்னல் விளக்குகளின் வெளிச்சங்களும் ரம்மியமாகவிருக்கும். ட்ரெஸ்ஸெல் வீதியுடன் சமாந்தரமாகத் தொடரும் மேடைகள் என் மனைக்கு மிக அண்மையாக முடிகின்றன. அவ்விடத்தில் நிலக்கரி வண்டிகளின் காலத்தில் நீர் நிரப்புவதற்காகப் பயன்படுத்தப்பட்ட தண்ணீர் தாங்கிகள் நின்று கொண்டிருக்கின்றன. நிலக்கரி வைத்திருக்கப் பாவிக்கப்பட்ட சிறு கிட்டங்கி அறைகள் ஒரு புராதன மியூசியத்தைப்போல இன்னமும் சிதைவுறாது இருக்கின்றன.

மிக நீளமான பத்து மேடைகளிலும் செடிகொடி வேலைப்பாட்டில் அமைந்த



(சிறுகதை)

# கலைஞன்

கருணாகரமூர்த்தி

நூற்றுக்கு மேற்பட்ட நீண்ட இரும்பு வாங்குகளில் கணிசமாகத் துரு ஏறி விட்டன. ரிக்கற் கவுண்டர் அருகாகச் சுவரில் எழுதப்பட்டிருக்கும் அந்தக்காலப் பிரயாணச்சீட்டுக் கட்டண விபரணையைப் பார்த்தால் வாய்விட்டுச் சிரிக்கலாம். நகரம் முழுவதும் பயணம் செய்ய பஸ்ஸிலும், ரயிலிலும் ஒரு நாள் முழுக்கப் பயன்படுத்தக்கூடிய சீட்டின் கட்டணம் 50 பெனிக்குகள். நகரத்தின் ஒரு கோடியிலிருந்து இன்னொரு கோடிக்கு எந்தப் பொது வாகனத்திலாவது போய்வர 20 பெனிக்குகள்.

வசந்தம் தொடங்கும்போது மேடையின் விரிசல்களிடையேயும், தண்டவாளங்களின் இடைவெளிகளிலும், புற்களும் சிறு செடிகளும் முளைக்கும். கோடையில் முழு வளர்ச்சி அடைந்து பசுமை காட்டிவிட்டு மாரி காலத்தில் பனிக்குவியல்களிடையே மறைந்து காணாமல் போய்விடும். வானம் சிவந்துள்ள அந்திக் கருக்கலில் அல்லது நிலவின் பின்னணியில் வட்டவடிவாக ஒரு கிரீடத்தைப்போல் அமைந்த ஸ்டேசனின் பாரிய கோபுரத்தைப் பார்த்தால் - ஒரே நாளில் கிரீடமும், குடியுரிமையும் பறிக்கப்பட்டு வீதியில் விடப்பட்ட ஒரு மகாராணியைப் பார்ப்பதுபோல் மனது சோகம் கொள்ளும்.

அந்தக் கோடையின் ஆரம்பத்தில் ஒரு நாள் காலை ஜன்னல்களை முழுவதுமாகத் திறந்து வைத்துப் புதிய காற்றை உள்ளே வரவிட்டு எதேச்சையாக வெளியே பார்த்தேன். முதலாவது மேடையில் சற்றே அருகருகாக இருக்கும் இரண்டு தூண்களை இணைப்பதுபோல் போர்க்காலத்தில் சிப்பாய்கள் பயன்படுத்துவது போன்ற கன்வஸ் துணி ஒன்றைக் கட்டி அதனுள் ஒருவன் தூங்கிக் கொண்டிருந்தான். நேராகவே சூரியன் அவன் மீது எறித்தபோதும் பொருட்படுத்தாது ஒரு காலைத் தூளிக்கு வெளியே தொங்கவிட்டபடி தூங்கினான். பின் எப்போது இறங்கிப் போனானோ தெரியாது. பகல், தூளி காலியாயிருந்தது.

மாலையில் அந்திக் கருக்கலில் ஒன்பது மணிக்குமேல் ஸ்டேசனின் வடக்குப்புற மதிலின் சிதிலமான பகுதியைத் தாண்டிக் கடந்துகொண்டு கையில் ஒரு சாப்பாட்டுப் பொதியுடன் மீண்டும் வந்தான். கோட்டைக் கழற்றித் தூளியில் போட்டுவிட்டு, சப்பாத்தையும் கழற்றி ஒரு பக்கமாக வைத்துவிட்டு வெறுங்காலுடன் நடந்துபோய் பைப்பில் முகம் கழுவி வந்து நிலத்தில் சம்மணமிட்டு உட்கார்ந்து சாவகாசமாகச் சாப்பிட்டான். பின் கோட்டுப் பையிலிருந்து ஒரு பியர் தகரத்தை எடுத்துச் சற்று குடித்துவிட்டு அதை இரும்பு வாங்கின் நுனியில் வைத்துவிட்டுத் தள்ளி உட்கார்ந்து சிகரட்



படிப்பகம்

www.padippakam.com

குடித்தான். நாலாவது மேடையில் 'எஸ்-Bான்' (நகர மின் ரயில்) ஒன்று நூறு கிலோ மீட்டர் வேகத்தில் கடந்து போனதை வேடிக்கை பார்த்தான். பியர்த் தகரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு மேடையின் முழு நீளத்திற்கும் ஆறேழு தடவைகள் நடந்தான். அண்மையாக வந்தபோது அவனை முன்னைவிடத் தெளிவாகக் காணமுடிந்தது. ஒல்லியான தேகம். கண் வலயத்தில் லேசான ஐரோப்பியச் சுருக்கங்கள். ஒரு கிழமை வயதான தாடி. தலையை வாரி விடுவதிலும் அக்கறையின்மை. அவனுக்கு வயது 35திற்கும் 50திற்குமுள் எத்தனையுமிருக்கலாம்.

மறுநாள் வெளியில் போய் வரும்பொழுது தொல்பொருள் ஆய்வாளர் கண்டால் அகம் மகிழவல்ல பெரிய புராதன தோற்பை ஒன்று கொண்டு வந்தான். தினமும் மாலையில் ஏதாவது சாப்பாடு வெளியிலிருந்து கொண்டு வந்து சாப்பிட்டுவிட்டுத் தூங்குவதும் பின் மறுநாள் காலையில் வெளியே போவதுமாக இருந்தாலும் ஏதாவது தொழில் பார்ப்பவனாகத் தெரியவில்லை. எப்போதாவது சில நாட்களில் மதியம்வரை தூளியை விட்டு இறங்காமலிருப்பான். வெளியில் சென்று கவனிக்கவேண்டிய காரியம் ஒன்றுமில்லாமலிருக்க வேண்டும் அல்லது ஆர்வமில்லாமலிருக்க வேண்டும். தினமும் இரண்டு மணிநேரம் ஒரு பூக்கடையில் வேலை செய்தாலே போதும். இப்படித் தூளிகட்டித் தூங்கவேண்டிய அவசியமின்றி ராஜகுமாரனாகவே வாழலாம்!

இங்கு குடி வந்து ஒரு மாதமேலாகியும் அவன் தன் காற்சட்டையையும் கோட்டையும் மாற்றாததிலிருந்து அந்தத் தோற்பையினுள் தன் மாற்றுடுப்புக்கள் ஏதாவது வைத்திருப்பானோ என்ற என் ஊகமும் நசித்துப் போயிற்று.

ஒருநாள் இரவுச்சாப்பாட்டை முடித்துக்கொண்டு வார்ஸாவிலிருந்து பாரிஸுக்குச் 11.05க்குச் செல்லும் ரயிலை ஜன்னலிலிருந்து வழியனுப்பிவிட்டுத் தூங்குவதற்காகப் படுக்கை, தலையணை உறைகளை மாற்றிக் கொண்டிருந்தேன். J.S.Bா:. இன்'**Jesus christus meine verlangen**' இன் அருமையான தொடக்கப்பகுதி தனிவாத்திய ஒலியாக 'ஸக்ஸபோனில்' புறப்பட்டு மிதந்து வந்தது. எங்கோ றேடியோவையோ டிவியையோ சத்தமாக வைக்கிறார்கள் என்றே முதலில் எண்ணினேன். எனினும் மெலிதான சந்தேகத்துடன் ஜன்னலுக்கு வந்து பார்த்தேன்.

அவன் ட்ரெஸ்ஸெல் வீதியின் சோடியம் ஆவி விளக்கில் மேடையின் இரும்பு வாங்கில் ஆரோகணித்து உட்கார்ந்து ஒரு ஸக்ஸபோனில் இசைத்துக் கொண்டிருந்தான். பின் வேறொரு பாடல். அரை மணிக்குமேல் நிறுத்தாது வாசித்தான். கற்பனைகளும், பிரயோகங்களின் நுட்பங்களும் மிக வித்தியாசமாக இருந்தன. ஷாம்பெயின் போத்தலால் தொண்டையை நனைத்தபின் இன்னொரு பாடல். அந்த இரவு வெகுநேரம் செலவு ஏதுமின்றி கிடைக்கக்கூடிய ஆனந்த பரவசம் அவனது காயலான் கடை ரக ஸக்ஸபோனிலிருந்து சுழித்தும் பொங்கியும் பிரவகித்து சார்லொட்டென்பேர்க் பள்ளத்தாக்கு முழுவதையும் நிறைத்தது.

பாவம், அவனும் ஒரு கலைஞன்! இவன்போன்ற சோம்பேறிக் கலைஞர்கள் உலகம் முழுவதும்தான் இருக்கிறார்கள். இசையை ஒரு போதைப்பொருளாகக் கொண்டு அதற்கு அடிமையாகி வாழ்க்கையின் மறு பரிமாணங்களைத் காணத்தவறிவிடுவது. தவற விடுபடுபவை பற்றி அறியாமலிருப்பது இவர்களின் பொதுக்குணங்கள்.

ஊரிலும் இப்படித்தான் ஒரு மிருதங்க வித்வான். அடுப்புக்கால்களை நாய் நகர்த்துமளவிற்கு வறுமை. இருந்தும் மனுஷன் இந்தண்டை இருக்கிற துரும்பை அந்தண்டை தூக்கிப்போட மாட்டார். கர்ப்பிணி மனைவி விறகுடைப்பாள். இவர் திண்ணையில் ஒரு காலை மடித்து மறு தொடைமேல் போட்டுக்கொண்டு உட்கார்ந்து வெற்றிலையைப் பன்னீர் பாக்குடன் போட்டுக் கொண்டு சும்மா பார்த்துக் கொண்டிருப்பார். "கடினவேலை பண்ணா விரல்கள் அப்புறம் ஜதிக்கட்டுகளுக்கு வசையறதில்லடா அம்பி." குடல் காயத்தொடங்கிய பின்னாலே என்னதான் ஜதி வேண்டிக்கிடக்கோ?

இந்த ஸக்ஸபோன் கலைஞன் மறுநாள் மேடையில் அணிலும், புலுணியும் ஓடிப்பிடித்து விளையாடுவதை வாயில் ஒரு புல்லை வைத்துக் கடித்துக்கொண்டு வெகுநேரம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

இரண்டாம் உலகமகா யுத்தம் முடிந்து நாடு புத்துயிர் அடைந்தபோது தன் மண்ணில் கால்வைத்த அனைவரையுமே தூக்கி நிறுத்திவிட்ட நாடு மேற்கு ஜேர்மனி. இக் கலைஞனைப் போலவே உழைக்கப் பிடிக்காதவர்களுக்கு இன்ன வேலையென்றால்தான் செய்ய முடியும் என்று அடம் பிடிப்பவர்களுக்கும் அரசு ஜீவன உதவிப்பணம் தரும். நாடு முழுவதும் இவர்களுக்காகவே கட்டப்பட்டுள்ள 'ஹைம்ஸ்' எனப்படும் 'லொட்ஜ்'களில் வதிவிட ஏற்பாடுகள் பண்ணித்தரும். உணவு, உடை, சப்பாத்து, கேளிக்கை, சில்லறைச் செலவுகளுக்குப் பணம் தரும். குறைந்தது ஒரு வருடமாவது வேலை பார்த்தவர்களாயிருந்தால் அவர்கள் இறுதியாகப்பெற்ற மாத(திரட்டிய)ச் சம்பளத்தின் 70%ஐப் புதிய வேலை கிடைக்கும் வரையில் தந்துகொண்டே இருக்கும். தொழில்வாய்ப்பு இலாகாவினர் தாமாகவே வேலை தேடிக் கொடுத்தாலோ அல்லது கொம்பியூட்டர் தகவல்களின்படி ஆங்காங்குள்ள வேலை வாய்ப்புக்கள், வெற்றிடங்கள் பற்றிப் பரிந்துரை செய்தாலோ - இவர்கள் பாதி முடியை மழித்துக்கொண்டோ அல்லது தலைமுடிக்கு மரங்கொத்திப் பறவையைப்போல் விதவிதமான சாயங்கள் பூசியோ, அல்லது மிகவும் அழுக்கான, கிழிந்த அல்லது இரும்பு ஆணிகள் அறையப்பெற்ற தோல் ஆடைகளை உடுத்திப்போயோ வேலை வாய்ப்பக்களைத் தட்டிக் கழித்து விடுவர்.

'பங்க்ஸ்' எனப்படும் இச் சோம்பேறிக்கூட்டம் அரசின் சமூகசேவைப் பகுதியினரின் பணம் கிடைத்த முதல் வாரத்திலேயே சிகரட், கஞ்சா, பியர், விஸ்க்கி, சூதில் காசை எண்ணிவிட்டு பசி எடுக்கும்போது சுரங்கப் பாதைகளிலும் சந்துபொந்தகளிலும் பொலிஸ் காணாதபடி நின்று போவோர் வருவோரை யாசிக்கும்.

ஒரு வாரமாகியிருக்கும். தன் கூட்டத்திலிருந்து பிரிந்து தனியாக வந்துவிட்டவன் போலத்தோன்றிய அக் கலைஞனைக் காணவில்லை. வேறு எங்கேயாவது ஜாகை சமைத்திருக்கலாம். எங்காவது பரதேசம் போயிருக்கலாம். அல்லது தன் கூட்டத்தினருடன் போதைப் பொருட்களின் லாகிரியில் அமிழ்ந்து போயிருக்கலாம் என எண்ணிக்கொண்டிருக்க மீண்டும் வந்தான். அன்றும் இளம் நெல் வயலில் காற்றடிப்பதுபோல இசை நளின அலைகளைக்கொண்டு சுகமான சந்தங்களுடன் குதித்துக் குதித்துப் பரவசப்பட்டது. விமானம் ஒன்று தரை இறங்குவது போலத் தாழ் சுருதியில் மெதுவாக - மிக மெதுவாக இறங்கிப் பின் திடீரென நாகமெனச் சிலிர்த்து பிளிறி மேலெழலானது.

அவன் பசி எடுத்தால் இசைப்பானோ இல்லை வயிறு நிரம்பியுள்ள குஷியில் இசைப்பானோ ஒன்றுஞ் சொல்லமுடியாது. ஷாம்பெயின் போல ஏதாவது ஒன்று தொண்டையை நனைக்கப் போதுமாயிருந்தால் போதும் ஸக்ஸபோன் குதிகொள்ளும். அன்று அடிக்கொரு தடவை கடந்துபோகும் ரயில்களின் இரைச்சலையும் பொருட்படுத்தாது பாரிஸ் ரயில் போன பின்னாலும் வெகுநேரம் இசையாகம் நடத்தினான்.

குளிர்காற்று மிதமாக வீசியது. ஒரு மீற்றர் உயரம் இருந்த பெரிய காட்போட் அட்டை ஒன்றை 'ட'வாக மடித்துவைத்து அதன் ஒதுக்கத்தில் மெழுகுதிரி ஒன்றை ஏற்றிவைத்து அலுமினியத்தாளில் சுற்றி வைத்திருந்த 'கலமாரிஸ்'ஐ (கணவாயில்



படிப்பகம்

www.padippakam.com

செய்யப்படும் ஒரு உணவு) 'ஸோஸ்'இல் தொட்டுச் சாப்பிட்டான். பின் ஷாம்பெயின்.

மீண்டும் சிவரஞ்சனியின் சாயலில் இருந்த ஒரு classical பாடலை நீண்ட தொடக்கப் பகுதியுடனும் கற்பனைகளுடனும் அனுபவித்து வாசித்தான். அடுத்து Lilly was here. மறுநாள் மதியம் வரையில் ஒரு காலை வெளியே தொங்கவிட்டபடி படுத்திருந்தான். எப்போது எழுந்து போனானோ தெரியாது.

சில நாட்களின் பின் தற்செயலாக மீண்டும் அவனை ஒரு நீண்ட சனிக்கிழமை (மாதத்தின் முதல் சனிக்கிழமை) மாலை தெருவில் கண்டேன். அன்று கடைகள், வியாபார ஸ்தலங்கள் எல்லாம் மாலை 6.30 மணி வரையில் திறந்திருக்கும். இரும்புப் பாலத்தின் வடக்குப் புறமாகவிருந்த 'மக்டொனல்ட்ஸ்' அவசர உணவுச்சாலை வாசலில் நின்று இவன் சக்ஸபோன் வாசித்துக்கொண்டிருந்தான். முன்னால் கவிழ்த்து வைக்கப் பட்டிருந்த தொப்பியினுள் போவோரும் வருவோரும் உணவுச்சாலையில் இருந்து வெளிப்பட்டோரும் காசுகள் போட்டனர். பரட்டைத் தலையுடன் அநாதைபோல் தென்பட்ட ஒரு பத்து வயதுச் சிறுவன் வத்தகப்பழக் கீறல் ஒன்றை நாடியால் தண்ணீர் சொட்டச் சாப்பிட்டுக் கொண்டு இவனது வாசிப்பை வேடிக்கை பார்த்தான். அவன் சேரும் சில்லறையில் கருத்தின்றி இசையுடன் ஒன்றிப்போய் கண்களை மூடியபடி தன்னை மறந்து வாசித்தான்.

தெருவுக்கு எதிர்ப்புறத்தில் ஒரு பெரிய 'ஷொப்பிங் கொம்பிளெக்ஸ்'. அதனால் ஜனநடமாட்டம் ஆறுமணியாகியும் அதிகமாகவே இருந்தது. அதையொட்டி ஒரு இம்பிஸ். இதில் சூடாக உருளைக்கிழங்கு 'சிப்ஸ்' வாங்கிச் சாப்பிட்டபடி ஒரு ஸ்டூலில் அமர்ந்து அவனை நானும் ரசித்தேன். 'மொற்ஸாட்'இன் சில பாடல்கள், பின் 'கறஜான்'இன் சில கற்பனைகள், பின் Sailing என்று 'றொக்'கிற்கு இசை சுழன்று வந்தது. சில சுரங்கப்பாதை இசைச்சித்தர்களுடன் சஞ்சரித்தான். கடைசியாக ஜெர்மனில் 'உடோ லின்டென்பேர்க்'இன் Auf wiedersahen ஐ (மீண்டும் சந்திப்போம்) மென்சோகம் தோய்த்து வாசித்தபோது அதுவரையில் அவனைச் சுற்றிவிட்ட சிறு கும்பல் "Nochmal bitte!" (தயவுசெய்து இன்னொருக்கால்) என்று கரகோஷம் செய்தது. யாரோ ஒருவன் பெரிய கிளாஸில் நுரையுடன் பியர் வாங்கிக் கொடுக்கவும் செய்தான். அவனை அன்று பார்த்ததுதான்.

அதன் பின்னால் வந்த ஒவ்வொரு வசந்தத்திலும் நிலையத்தின் வளவில் நிற்கும் 'ஏர்லெ' மரங்களின் நீண்ட மெல்லிய அடர்ந்த கிளைகள் பூம்பாளைகள் எல்லாம் ஏககாலத்தில் மலர்வதனால் பாரந்தாங்காமல் தலைகீழாக விழுதுகள் போலத் தொங்கி மரத்தின் தண்டே தெரியாதபடி மறைக்கின்றன. 'ஹஸெல்' மரத்தின் விதைகள் நிலமெங்கும் இறைந்து கிடக்கின்றன. அணிலும் புலுணியும் ஓடிப்பிடித்து விளையாடுகின்றன. அவன் தூளியும் தோற்பையும் இன்னும் அங்கேயே இருக்கின்றன. பாரிஸ் ரயிலும் சரியாக 11.05க்கு கடந்து விடுகிறது. இசை மட்டும் இல்லை.

P.கருணாகரமூர்த்தி
ஜூன், 1991.

திரு கருணாகரமூர்த்தி யாழ்ப்பாணம், புத்தூரில் பிறந்தவர் தற்போது பேர்லின் நகரில் வசித்து வரும் இவர் இசைத்துறையில் மிகுந்த அக்கறை கொண்டவர் இதுவே அச்சில் வரும் இவரது முதலாவது கதை.

## கல்லறைக் கீதங்கள்

எஸ்.சண்முகதாசன்

என்னுடைய பெயர்
என்னவென்று
எனக்குத் தெரியாது.
நான் யாரென்பதும்
மறந்து விட்டது.
ஆனால்-
ஒன்று மட்டும்
எனக்கு நல்ல ஞாபகம்.
நான்
மரணமாகவில்லை
அகால மரணமானேன்.

* * *

என்னை
எரிக்கவில்லை
புதைக்கவில்லை
நான் நாளாகவே...
ஏதோவொரு
தெருவின் ஓரத்தில்
ஏதோவொரு
பற்றையின் பின்புறத்தில்

* * *

நான்
புண்ணியம் செய்தவன்
அதனால்தான்
நரகத்தில் இருந்து
இங்கு-
இடமாற்றம்
செய்யப்பட்டிருக்கின்றேன்.
ஆனால்-
நீங்கள்....?

* * *

என்னை
தனிமை வாட்டும்
என்று-
கவலைப்பட வேண்டாம்
ஏனெனில்
என்னைப்போல்
எத்தனை.... எத்தனையோ பேர்
என்னுடன்......



படிப்பகம்

www.padippakam.com



# தமிழகச் சஞ்சிகைகளும் தமிழீழப் போராட்டமும்.

*சி. சகாதேவன்.*

மிகவும் நீண்டகாலமாக தமிழகச் சஞ்சிகைகளே இலங்கைத் தமிழ்மக்கள் உவந்து படிக்கும் சஞ்சிகைகளாகும். இலங்கைத் தலைமைத் தபாலகத்தில் செய்திப் பத்திரிகைகளாகப் பதிவு செய்யப்பட்டு தமிழகத்திலிருந்து வெளிவரும் இச் சஞ்சிகைகளின் முக்கியமான சந்தைகளிலொன்று இலங்கைத் தமிழ் மக்களாகும். இலங்கையின் இன்றைய பரிதாபகரமான யதார்த்தத்தின் மத்தியில் இச் சந்தை சேதமடைந்துள்ள போதிலும், இலங்கைத் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் ஸ்திரமானதாகவே இருக்கிறது. 'இதயம் பேசுகிறது' என்று பயணக் கட்டுரைகளை ஆனந்த விகடனில் எழுதிக் காசு சம்பாதித்த மணியன், தான் சொந்தமாக சஞ்சிகை ஆரம்பித்தபொழுது இலங்கைப் பயணக் கட்டுரையையே முதன் முதலில் எழுதினார். இது 'இலங்கைத் தமிழ்மக்கள்' என்கிற சந்தை எவ்வளவுதூரம் முக்கியமுடையது என்பதற்கு நல்லதொரு உதாரணமாகும்.

என்னுடைய நோக்கம் இந்தச் சந்தை பற்றி ஆராய்வதல்ல. இலங்கைத் தமிழ் மக்களிடையே மிகவும் தாக்கத்தை ஏற்படுத்துகிற இச் சஞ்சிகைகள், தமிழக மக்களிடத்தில் எவ்வளவுதூரம் செல்வாக்குச் செலுத்தும் என்பது எழுதாமலே விளங்கும். தமிழக மக்களிடத்தில் கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றி எந்தவிதமான அபிப்பிராயங்களை இச்சஞ்சிகைகள் உருவாக்கியுள்ளன, இன்றைக்கு எவ்வாறான அபிப்பிராயத்தைப் பதிய வைக்கின்றன என்பதைக் கணிப்பதுதான் என்னுடைய நோக்கமாகும்.

பெரும் வாசகர் பரப்பை மனங்கொண்டு தமிழகத்தில் வாராவாரமோ மாதமிருமுறையோ உற்பத்தி செய்யப்படும் சஞ்சிகைகளைத்தான் தமிழக சஞ்சிகைகள் என்று இங்கு நான் குறிப்பிடுகின்றேன். மிகவும் சிறியளவிலான கலைஇலக்கிய ஆவலர்களுக்காக வெளியிடப்படும் சிற்றிலக்கிய சஞ்சிகைகளையோ, மிகுந்த பொருளாதார நெருக்கடிகளுக்குள்ளும், அரச அடக்குமுறைக்குள்ளும் தமிழக மக்களின் நலன்களைப் பிரதிபலிக்கின்ற மாக்ஸிஸ-லெனினிஸ அமைப்புக்களின் சஞ்சிகைகளையோ அல்ல.

இந்த வியாபாரப் பத்திரிகைகளை, (அவர்களே குறிப்பிட்டுக் கொள்ளும்) குடும்பப் பத்திரிகைகள், சமூக அரசியல் பத்திரிகைகள் என்று வசதி கருதிப் பிரிக்கலாம். ஆனந்த விகடன், குமுதம், குங்குமம், சாவி, ராணி, தேவி முதலானவைகள் குடும்பப்பத்திரிகைகள் என்றும் துக்ளக், நக்கீரன், தராசு, ஜூனியர் விகடன், போலீஸ் செய்தி, சாணக்யன் முதலானவற்றை அரசியல் சமூகப் பத்திரிகைகள் என்றும் கூறிக்கொள்வது வழக்கம். இவை தவிர சினிமாச் சஞ்சிகைகளும் ஏராளமாக வெளிவருகின்றன. எனினும் மேலே குறிப்பிட்ட குடும்ப, அரசியல், சமூக சஞ்சிகைகளே தமிழக மக்களிடம் அபிப்பிராயங்களை ஏற்படுத்துவதில் பெரும்பங்கு வகிக்கின்றன. (இதில் நாளிதழ்களுக்கும் கணிசமான பங்குண்டு.)

1983 ஜுலை மாதத்திற்கு முன்னர்வரை இலங்கை பற்றிய பொதுவான அறிவென்பது இந்தத் தமிழகப் பத்திரிகையாளரிடம் பெருமளவில் இருந்ததில்லை. 1983 ஜுலை மாத தமிழக நாளிதழ் ஒன்று இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள் சிலரின் படத்தின் கீழ், "யாழ்பாணத்தவர்களால் கற்பழிக்கப்பட்ட தமிழ்ப் பெண்கள்" என்று பிரசுரிக்கும் அளவிற்கு யாழ்ப்பாணத்தவர்கள் தமிழர்கள் என்பது தெரியாதிருந்தது. மிகவும் சிறுபான்மையான பத்திரிகையாளர்களே இலங்கை பற்றிய அறிவும் அக்கறையும் கொண்டிருந்தனர்.

1983 ஜுலைப் படுகொலைகளுக்கு சிலகாலம் முன்பாக 'துக்ளக்' இலங்கைப் பிரச்சனை தொடர்பாக சிலரது பேட்டிகளை வெளியிட்டிருந்தது. சஞ்சிகை கைவசமில்லாததால் குறிப்பான விவரங்களைத் தரமுடியவில்லை எனினும் எம்.ஜீ.ஆரினதும், ஜே.ஆர்.ஜயவர்த்தனாவினதும் பேட்டிகளும் இடம்பெற்றிருந்ததாக நினைவு. (ஜே.ஆரின் பேட்டியை வெளியிட்டதற்காக சோவினுடைய பிளாஸ்ரிக் பொருட்களை இலங்கையில் விற்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதாக ஒரு கதையுண்டு). அப் பேட்டியில் "யாழ்ப்பாணத்தவர்கள் மட்டக்களப்புத் தமிழர்களை நீண்டகாலமாகவே அடக்கி வருகிறர்கள். இவர்களே இப்படி நடக்கும்போது இலங்கை அரசு இவர்களை ஒடுக்குகிறது என்பதெல்லாம் வெறும் பிரச்சாரம்தான்" என்பதுபோன்ற பொன்மொழிகளை எம்.ஜீ.ஆர். அருளியிருந்தார் எனவும் ஞாபகம்.

மொத்தத்தில் 'துக்ளக்', இலங்கைத் தமிழர்களுக்கு பிரச்சனைகளுண்டு ஆனால் அது ஒன்றும் சகிக்கமுடியாததல்ல, அதற்காக ஒன்றும் அவர்கள் போராடத் தேவையில்லை என்ற தனது கருத்துக்களை மனதார நிறுவ முயன்றது. இது நடந்தது, உமாமகேஸ்வரனும் பிரபாகரனும் பாண்டிபஜாரில் ஒருவரை ஒருவர் சுட்டுக்கொல்ல முயன்று சிறையிலிருந்த காலம் - இலங்கைத் தமிழர் பிரச்சனை பற்றிய அக்கறை தமிழகத்தில் அரும்பத் தொடங்கிய காலம். துக்ளத்தின் கருத்துக்களுக்கு மறுப்புக்கள் வெளியிட்டதாகவும் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றதாகவும் நினைவிருக்கிறது.

1983 ஜுலைப் படுகொலைகளைத் தொடர்ந்து வந்த



படிப்பகம்

www.padippakam.com

'துக்ளக்' தனது கோலத்தை உடனடியாகவே மாற்றியது. இந்தியா ஒரு அன்னையாகவும் அவள் அழும் கண்ணீரின் ஒரு துளி இலங்கையாகவும் சித்தரிக்கும் அட்டைப்படத்தை வெளியிட்டது. (இந்த இடத்தில், இந்திய ஆக்கிரமிப்புப் படைகள் ஈழத்திலிருந்தபோது, "ஆசியாக் கண்டத்தின் ஆண்குறி போன்ற புண்ணிய பாரதத்தை இலங்கையின் தலையின்மேல் வைத்தவர் யார்?" என்று சேரன் எழுதியதையும் நினைவு படுத்துங்கள்).

1983 ஜுலைப் படுகொலைகள் நிலைமையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. ஏறக்குறைய அனைத்து சஞ்சிகைகளும் இலங்கை பற்றிய செய்திகளைத் தாங்கி வந்தன. இலங்கைத் தமிழர்கள் பற்றித் தமிழக மக்களிடம் ஆழமாக இருந்த அனுதாப உணர்வு இதற்கொரு காரணம். ஆரம்ப காலங்களில் அனைத்து இயக்கங்களுக்கும் அனுதாபமாக இருந்த இச் சஞ்சிகைகள் 1984 ஆரம்பம் முதல் ஓரளவுக்கு PLOTEக்கு ஆதரவானதாக மாறின. 1984 நடுப்பகுதி முதல் ஜுனியர் விகடனும், தேவியும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானவையாக மாறின. இது ராஜீவ் காந்தியின் கொலைவரை நீடித்தது.

ஏனைய இயக்கங்களும் சஞ்சிகைகளுடன் நட்புறவு கொள்வதற்கு முயன்று வந்தபோதும் விடுதலைப் புலிகள் இயக்கம் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வந்தது. வெகுஜனத் தொடர்பு என்பது வெடிகுண்டைக் காட்டிலும் வலிமையானது என்பதை அவர்கள் உணர்ந்துதான் இதனைச் செய்தார்கள் என்று நான் அடித்துச் சொல்லமாட்டேன். ஆனால் ஜுனியர் விகடனுக்கும் தேவிக்கும் தமது இயக்கப் பயிற்சிகள், தாக்குதல்கள் பற்றிய படங்களை உடனுக்குடன் சப்ளை செய்து வந்தார்கள். இதனாலேயே இந்தியப் படைகள் ஈழத்தில் ஆக்கிரமிப்பு யுத்தத்தை நடத்திக் கொண்டிருந்தபோதும் இவ்விரு சஞ்சிகைகளும் புலிகள் பற்றிய செய்திகளை வெளியிட்டு வந்தன. அதிலும், குறிப்பாக, ஈழத்தின் மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம்.கோபாலரத்தினம் எழுதிய 'ஈழமண்ணில் ஒரு இந்தியச் சிறை', தொடராக ஜுனியர் விகடனால் வெளியிடப்பட்டது. ஏ.எஸ் பன்னீர்செல்வன் இலங்கைக்குச் சென்று எழுதிய தொடரொன்று 'குங்குமம்' வெளியிட்ட பத்திரிகையொன்றில் வெளிவந்தது.

துக்ளக் தவிர்ந்த ஏனைய சஞ்சிகைகள், இந்தியப் படைகள் ஈழத்தில் இருந்தபோதும் ஈழ விடுதலைக்கு எதிரானவையாகப் பெருமளவுக்கு மாறவில்லை. துக்ளக் மட்டுமே இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்கு ராஜீவ் காந்தி வழங்கியதையும் விட அதிக அளவு ஆதரவை மனதார வழங்கியது.

ஈழம் விடுதலை பெறுமானால் தேசிய இனங்களின் சிறைக்கூடமாக இருக்கும் இந்தியாவில் எழுச்சிகளைத் தோற்றுவிக்கும் என்பதை மற்ற எந்தப் பத்திரிகையாளர்களை விடவும் தீர்க்கதரிசனமாகக் கணித்துள்ளவர் துக்ளக் 'சோ'. ஏகாதிபத்தியங்களுக்கு இந்தியாவை அடகுவைக்கும் அவரது கனவை இந்த நிலைமையானது கனவாக மட்டுமே மாற்றிவிடும் என்பதைத் தெளிவாக உணர்ந்து கொண்டவர். எனவேதான் காலத்தைக் கணித்துத் தொழிற்படுகிறார். இலங்கை-இந்திய ஒப்பந்தம் அவருக்குக் கிடைத்த வரப்பிரசாதம். முன்னாள் எழுத்தாளர் ஜெயகாந்தன், சட்டசபைக் கதிரைக்கு வீணீர் வடியக் காத்திருக்கும் தா.பாண்டியன் முதலானவர்கள் ஜால்ரா போட, பரவலான கருத்தரங்குகளை நடத்த முயன்று முட்டையெறி வாங்கியவர் இவர்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்குப் பின்னான அனைத்து துக்ளக் இதழ்களிலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்துக்கள் என்ற போர்வையில், விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான கருத்துக்களையே எழுதி வருகிறார். விடுதலைப் புலிகளின் ஜனநாயக விரோதப் பண்புகளைக் காரணங்காட்டி தனது கருத்துக்களுக்கு ஆதாரமாகச் சொல்லி வந்தவருக்கு ராஜீவ் காந்தியின் கொலை ஒரு பெரும் அச்சுறுத்தலை உருவாக்கியது. இதன் பின்னர் விடுதலைப் புலிகளை முற்றாகத் தடை செய்யும்படி எழுதி வருகிறார். இவரே இன்றைக்கு ஈழ விடுதலைபற்றிய பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கும் பத்திரிகையாளராக இருக்கிறார். இவரது கருத்துக்களே ஈழவிடுதலைபற்றிய தமிழகப் பத்திரிகைகளின் இன்றைய கருத்தாக மாறிவிட்டது. இவர்களது வியாபாரப் பத்திரிகை உலகின் கருத்துக்களுக்கு மாறாக மாக்ஸிஸ-லெனினிஸக் கட்சிகள் வெளியிடும் கேடயம், மனஓசை, புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம், தோழமை முதலானவை விடுதலைப் போராட்டற்குச் சார்பான கருத்துக்களை முன்வைக்கின்றன. தடா (TADA) சட்டத்தின் கீழ் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வரும் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் விடுதலைப் புலிகளின் ஜனநாயக விரோதப் பண்புகளுக்கு எதிரானவர்கள் என்பதே தமிழக அரசு ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரானது என்பதை விளக்கப் போதுமானது. இவர்களது கைதை விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்றே துக்ளக் முதலான விளம்பரப் பத்திரிகைகள் திட்டமிட்டு எழுதிவருகின்றன.

ஏகாதிபத்தியங்களுக்குச் சார்பாக உருவாக்கப்பட்ட - இந்தியாவின் நடுத்தர வர்க்கத்தையே இல்லாதொழித்து அவர்களை ஏழைகளாக்குகின்ற - பட்ஜெட்டை மிகவும் தீவிரமாக ஆதரிப்பதில் முன்னிக்கும் 'சோ', தமிழக முதல்வரின் முக்கியமான ஆலோசகர். இவர் ஏகாதிபத்தியங்களுக்கு ஆற்றிவரும் பணிகள் பற்றி பின்னர் பார்க்கலாம்.

## தமிழனின் பத்திரிகா தர்மம்

**அன்மையில் லண்டனிலிருந்து வெளிவரும் தமிழன் வார இதழில் பனிமலர் இதழ் 2ல் வெளிவந்த ஒறேற்றர் சுப்பிரமணியத்தின் பேட்டி பனிமலரின் அனுமதியின்றியே வெட்டிக் குறைக்கப்பட்டு பிரசுரமாகியிருந்தது. பனிமலர் எனும் தனி நபரொருவர் தமிழன் பத்திரிகைக்காக பெற்ற பேட்டியென்ற கருத்தை வாசகர்களுக்கு எற்படுத்தும் விதமாகவே இது பிரசுரமாகியிருந்தது.**

**பனிமலரின் கருத்துக்கள் பரவலாகப் பிரச்சாரப் படுத்தப்படுவது மகிழ்ச்சியைத் தரும் செயலெனினும், பத்திரிகாதர்மத்திற்கு உட்பட்டே மறு பிரசுரங்கள் செய்யப்படவேண்டும் என்பது வழமை. ஈழ நாடு, தினகரன் போன்ற நாழிதழ்கள் தமிழன் ஆசிரியருக்கு பத்திரிகாதர்மத்தைக் கற்றுக் கொடுக்கத் தவறிவிட்டன என்பதை பனிமலர் உணர்ந்து கொள்கின்றது.**

**இதேபோலவே நெதர்லாந்திலிருந்து வெளிவரும் 'அ.ஆ.இ', பிரான்சிலிருந்து வெளிவரும் 'ஓசை' ஆகியவற்றுக்கும் நேர்ந்துள்ளது என்பது இந்த நடவடிக்கைகள் தற்செயலானதல்ல என்பதையே உணர்த்துகின்றது.**

**இவ்வாறான செயல்களை பனிமலர் வன்மையாகக் கண்டிக்கிறது.**



படிப்பகம்

www.padippakam.com

ஈழத் தமிழர் மலையாளிகளா?

சங்கிலி

# வரலாறும், தகராறும்.

சிறுவயதிலிருந்தே ஒரு சந்தேகம். இலங்கைத் தமிழர்கள் என்று கூறப்படுவோருக்கும், மற்றைய இடங்களில் வசிக்கும் தமிழர்களுக்கும் கலை, கலாச்சார மொழி பரிவர்த்தனை, பழக்க வழக்கங்களில் உள்ள வேறுபாடுகளை நோக்கும்போது இலங்கையில் தற்போது தமிழர்கள் என்று கூறுவோர் தமிழ்பேசுவோரே தவிர பரம்பரைத் தமிழர்கள் என்ற வாதத்தில் சந்தேகம் எழவே செய்கிறது.

முன்னர் தமிழ் சினிமாக்களில் கதாநாயகி தனது முறை மாப்பிள்ளையை "மாமா" என்று துரத்தும்போது ஏற்பட்ட சந்தேக விளைச்சலின் விளைவே இந்த எழுத்துக்கள். எங்கள் ஊர்களில் கலியாணம் கட்ட முறையுள்ளவர்கள் மாமா-மருமகள் உறவுக்காரர்களாக இல்லை என்பது எங்கள் எல்லோருக்கும் தெட்டத்தெளிவான விடயம். அக்கா மகளைத் தாரமாக்கும் முறை தமிழ்நாட்டுக்குரியது.

சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் எங்கள் மன்னர்கள் என்று கூறப்பட்டபோதும் பாண்டியர்களே தமிழர்கள் என்பதும் சோழர்கள் மகாராஷ்டிரத் தொடர்புள்ள தெலுங்கர்கள் என்பதும் சேரர்கள் மலையாளத்தவர்கள் என்பதும் இந்தியச் சரித்திரம் கூறி நிற்கும் செய்திகள். தமிழர்களை அடிமைப்படுத்தி ஆண்டவர்கள் அனைவரும் தமிழ் மன்னர்களாகவே போற்றப்பட்டார்கள். கடைசியாக ஆண்ட பிரிட்டிஷ் அரசபரம்பரை நல்லகாலமாக ஐரோப்பாவில் இருந்துவந்த படியால் அவர்களை இவர்கள் தமிழர்களாக்காமல் விட்டுவிட்டார்கள். ஆனாலும் 'விசுவாசம்' குறைந்தபாடில்லை.

திருமண விவகாரம் மாத்திரமல்ல, உணவு விவகாரத்தில் கூட புட்டு அவித்து உண்ணும் ஆட்களாகவே இருந்து தமிழ்நாட்டு மக்களிடமிருந்து வேறுபட்டுப் போகிறோம். தேங்காய் இல்லாமல் எங்கள் சமையல் நடப்பது கிடையாது. சிலவேளை வெளிநாடுகளில் எப்படியோ தெரியாது. ஆனாலும் நாங்கள் 'சாம்பார்' செய்து சாப்பிடுவது வழக்கில் இல்லாத விடயம். எங்களூர் தமிழ் சாப்பாட்டுக் கடைகளில் புளித்த தோசை (தோசையா அது?) மீது ஊற்றும் புளித்த பழங்கறிகளின் அல்லது அழுகிய பூசனிக்காய் போன்றவற்றின் கூட்டினை சாம்பார் என்று எண்ணி மாய வேண்டியதில்லை. ஏனென்றால் எங்களூர் தோசைக் கடைக்காரர்களுக்கு சாம்பார் என்றால் என்ன என்றே தெரியாது. வெளிநாட்டில் வசிக்கும் எங்களுக்கு 'ஒரிஜினல்' சாம்பாரை ருசிபார்க்கும் வாய்ப்பு நிறைய உள்ளது.

இதென்ன சாம்பார் தோசை கதை என்று முணுமுணுப்பீர்கள். மொழியை மறந்தாலும் உணவு விவகாரங்களில், திருமண விவகாரங்களில் மாற்றங்கள் விரைவாக ஏற்படுவது கிடையாது. கயானாவில் உள்ள இந்தியர்கள் இன்று ஆங்கிலத்தையே பேசுகிறார்கள். ஆனால் சப்பாத்தியையும், சப்ஜியையும் விடவில்லை. மொழியை மறந்தவர்கள் ஐரோப்பிய கலாச்சாரத்துள் மூழ்கினாலும் தங்கள் உணவுமுறைகள் உறவுமுறைகளில் இதுவரை மாற்றங்கள் செய்யாமல் இருப்பது அவர்கள் எங்கிருந்து வந்தார்கள் என்பதைக் காட்டி நிற்கிறது.

எங்கள் பழக்கவழக்கங்களைப் பாருங்கள். மாமன் மகள்தான் முறைப்பெண். அக்காவின் மகளல்ல. (தற்போது சிலர் மைத்துனி மகளையும் முறைப்பெண் என்கிறார்கள்). சிங்கள மக்களுக்கும் மாமன் மகளே முறைப்பெண் என்பது பொதுவான விடயம். தமிழ் நாட்டில் தேங்காய் மிகவும் விலையுயர்ந்த சமாச்சாரம். பாவனை கிடையாது. இலங்கைத் தமிழர்கள் சிங்களவர்கள் தேங்காய் இல்லாமல் சமைப்பது கிடையாது.

தாய்மாமனை நாங்கள் அம்மான் என்றே அழைக்கிறோம். அவர் எங்களுக்கு தாய், தந்தைக்கு ஒப்பானவர். அவரை மைத்துனராக நாம் எண்ணுவதில்லை. நாங்கள் தமிழ்நாட்டுப் பரம்பரைகள் என்றால் ஏன் மாமனைக் கலியாணம் செய்து தொலைக்காமல் இதுவரை இருக்கிறோம், பிட்டு அதுவும் குழல்பிட்டு சாப்பிட நாம் ஏன் அலைகிறோம்? இதுவும் தமிழ்நாட்டில் வழக்கில் இல்லாத ஒன்று. இந்த வேறுபாடுகள் பல நூற்றாண்டுகளாக தொடர்ந்து வரும் விடயங்கள்.

நாங்கள் உருவ அமைப்பில் இந்திய உபகண்டத்தில் வாழ்பவர்களையே ஒத்துள்ளோம். பெரும்பாலான பழக்க வழக்கங்களில் இருந்து எமது மொழிபேசும் தமிழ்நாட்டு மக்களிடமிருந்து வேறுபடுகிறோம். அவ்வாறெனில் இந்தியாவில் உள்ள எந்த மக்களோடு இன்று ஒத்துப்போகிறோம்?

எமது உணவு, திருமண விடயங்களில் நிறைய நாம் கேரளத்தவர்களோடும் இலங்கையில் சிங்களவரோடும்தான் ஒத்துப்போகிறோம். அவர்களும் அம்மா(வனின்)னின் மகளையே முறைப்பெண் என்கிறார்கள். குழல்புட்டு (அடிக்க) சாப்பிட அவர்களும் எங்களைப்போல் ஆசையுள்ளவர்கள்தான். அவர்களும் பிச்சை எடுப்பவர்களை தெண்டல்காரன் என்றுதான் கூறுகிறார்கள். கச்சவடம் என்று வியாபாரத்தைக் கூறுகிறார்கள். சந்தேகம் என்பதைச் சம்சயம் என்றே கூறுகிறார்கள். மானக்கேட்டைப் போக்கணங்கேடு என்று கூறுகிறார்கள்.

மலைநாடான மலயரட்ட சிங்கள மக்கள் 'சீத்த' என்ற மலையாளத்து முண்டும் சட்டையும்தான் அணிகிறார்கள். தந்தையை அப்பச்சி என்றும் தாயை அம்மச்சி என்றும் கூறுகிறார்கள். மலையாளத்தில் அப்பச்சன் எனவும் அம்மச்சி என்றும் அழைக்கிறார்கள்.

இதனால் நாங்கள் எல்லோரும் மலையாளத்தவர் என்று எண்ணவேண்டியதில்லை. மலையாளத்தவர் இலங்கையை ஆக்கிரமிக்கவில்லை. ஆளவில்லை. அப்படியாயின் இந்த மலையாளச் சமாச்சாரங்கள் இலங்கையில் தமிழர்களையும், சிங்களவர்களையும் ஒன்றாகப் பாதித்தது எப்படி?

இன்னொரு தகவல். உலகின் ஆதிகால தாய்வழிச் சமுதாயப் பழக்க வழக்கங்கள் இன்றும் கேரளாவில் உண்டு. யாழ்ப்பாணத்தில் காரைநகர் பகுதியில் வாழும் 'முக்கியர்கள்' என்ற சமுகத்து மக்கள் 'குதகமுறைமை' என்பதைப் பின்பற்றுகிறார்கள். இது தாய்வழிப் பரம்பரையைக் குறிக்கும் செயல்பாடாகும். கிழக்கு மாகாணத்து 'முக்கிய' சட்டங்கள் பெரும்பாலும் வடமாகாணத்து 'தேசவழமை'யிலிருந்து வேறுபடுவதையும் இந்த வேளை குறிப்பிடுவது நல்லது.

மேற்கூறப்பட்ட விடயங்கள் பரம்பரைத் தமிழ்க் கலாச்சாரம் என்பதற்கு முற்றிலும் மாறான கருத்துக்கள். இந்த முரண்பாடுகளும் இவற்றோடு சம்பந்தப்பட்ட மக்களும் தமிழ்



படிப்பகம்

www.padippakam.com

என்ற எல்லைக்குள் வரையறை செய்யப்பட வேண்டியவர்களா என்று தீர்மானிக்க முடியுமா?

கடலோடிகள் (கள்ளக்கடத்தல்காரர்கள் அல்ல) தான் முதலில் புதிய இடங்களை அடைகிறார்கள். 'முக்கிய' சமூகம் கடற்தொழில் புரிபவர்கள். சரித்திரத்துக்கு (எமக்கு சரித்திரம் இல்லை) முற்பட்ட காலம் முதல் சாதாரணமாக எல்லா நாடுகளுக்கும் போய்வந்தமைக்கு சான்றுண்டு. ரோம சாம்ராச்சியத்தில் அகஸ்டஸ் சீசர் காலத்தில் 'சேர' நாட்டு வணிகர்கள் வந்ததாகக் குறிப்புண்டு. இலங்கைக்கு முதலில் வந்த போத்துக்கீசர் வடபகுதி மக்களை 'மலபாரிகள்' என்று கூறிச் சென்றதை நினைவு கூர்வது பொருத்தமாக இருக்கும். மலையாளத்தையும் 'மலபார்' என்றுதான் அவர்கள் கூறுகிறார்கள். கேரளத்திலும் ஒரு 'ஈழவர்' என்ற மக்கள் கூட்டம் உண்டு.

இந்தத் தகவல்கள் பற்றி மேலும் விளக்கங்கள் கிடைத்தால் எமது இலங்கைச் சரித்திரத்தினை உண்மையுடன் எழுதும் வாய்ப்புக்கள் அதிகமாகும்.

## மாலை விழுந்தபின் முன்னிராப் பொழுதொன்றில்....

மையல் பொழுதில்
மது அருந்துதல்
உயர் குடி.
நளினம் சொட்டும்
நாகரிகம்.
நெஞ்சுக்குள் தளம்பும்
வஞ்சம் வன்மம்.

வடிசாராயம்
குடியானவர்க்கானது.
நேசங்கள் நெருங்கும்
உறவுகள் சூழும்
கோபங்கள் நெகிழும்
பொங்கியும் கசியும்
சுமை மெல்ல இறங்கும்.

பாட்டுக் கட்டலாம்
கட்டற்று நிமிரலாம்
உள்ளத்தைக் கொட்டலாம்
சிறகின்றிப் பறக்கலாம்
என்னெல்லாம் பண்ணலாம்.

மடக்கென்று ஊத்தாமல்
தொண்டை எரித்தாலும்
ரசித்து, ருசித்து
மயிர்கால் சிலிர்த்து
மென்னென ஏறி
தாளம் இழைய
பாட்டொன்று பாடி...

"கண்ணின் மணிபோல
உறவாடினாய்
காற்றிலும் இனிதாக
தாலாட்டினாய்
விண்ணிலே நிலாகாட்டி
சோறூட்டினாய்
அம்மா... தாயே...
ஏனிந்தக் கோலம்
அம்மா அம்மாவென்று..." **

இருட்டின்றி நிழல்களை
எட்டி
நினைவு வலையத்துள்
ஆழ்ந்து,
இறங்காதே... ஏறு...
இந்தா சுவை.
சின்னதாய் ஒரு முறடு
கலைஞனே நீ பாடு.

கத்தரி வெயிலிலே - புழுதி
புகைந்தெழும் சாலையிலே - தாகம்
மேலெழ யார் நடந்தார் - கானல்
நீருக்கோ அலர வந்தார் -
(கத்திரி)

எழுதுணி ஓடு என்றார் - கருவி
கையெடு போரே என்றார் - எதிரி
நாற்புறம் சூழ வந்தான் - தோழன்
கூடவே சேர்ந்து வந்தான் -
(கத்திரி)

தந்தன தானதன்னா - தன
தந்தனதானதன்னா
தந்தனதானதன்னா - தோழா
நீயுமா கூட வந்தாய்...

இந்தா
இன்னுமொரு முறடு எடு
ஊறுகாயை நாவில் தடவு
காரசட்னியில் இட்லியை தொடு
உடம்பைக் குலுக்கி
மனசை உதறி - ஆடு
குதித்தாடு
கூவு கூத்திடு
நரம்புகளை நீவு
பாட்டால் நிரவு
கனவுகளை நிரவிடு
ஆடடா ஆடு
தோம் தகதோம் தகதகதகதகதோம்
தகதோம்..

யாரங்கே நண்பர்போல
கோடியாலே உள்நுழைந்து
பாரெங்கள் படைப்பெருப்பை
நொடியில் நீர் சரண்புகுவீர்
என்றுமாய்ச் சொல்லிநின்றார்
மார்தட்டும் நியாயவானே
பஞ்சசீலமும் மறந்து போச்சா
அகண்டபாரத கனவுமாச்சா
காந்தி கைத்தடி துவக்குமாச்சா
ஒப்பந்தமென்ன சரணாகதியா?
தகதோம் தகதகதகதோம் தோம்
தகதோம் தகதோம்

கொதிஎண்ணைத் தாழியாலே
நெருப்பின்மீதா வீழ்ந்து போனோம்
மீண்டும் நாம் ஏன் ஏமாந்தோம்
தகதோம் தகதகதோம் தோம்
தோம்... தோம்....


வி.பி.அரவிந்தன்
ஆகஸ்ட் 1987,
சென்னை

** "கண்ணின் மணிபோல..." பாடல் வரிகள் கலைஞர் லடீஸ் வீரமணியின் பாடலொன்றில் இருந்து எடுத்தாளப் படுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com



# யில்மஸ் G'ணேயின் ஒரு சுயசரிதத்துக்கான முன்வரைவு

தமிழில்: ம.அருட்குமாரன்

*[வாழ்வின் இறுதிக்காலத்தைப் பாரிஸ் மாநகரத்தில் அரசியல் அகதியாகக் கழித்து 1984ம் ஆண்டில் மரணமான இவர் துருக்கியின் மிகவும் நன்கு அறியப்பட்ட திரைப்பட இயக்குனராவார். தனது திரையுலக வாழ்வைப் படச்சுருள் காவும் பையனாக ஆரம்பித்து துருக்கியரால் மிகவும் நேசிக்கப்பட்ட நடிகராகவும், திரைப்பட இயக்குனராகவும் வாழ்ந்தார். இளமையிலிருந்தே இடதுசாரிக் கொள்கைகளால் எழுச்சிபெற்ற இவர் இறப்புவரை சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் குரலை எதிரொலித்தார். மக்களால் நேசிக்கப்பட்ட இந்த மாபெரும் கலைஞனை மக்கள் விரோத அரசுகள் பலதடவை சிறைக்குள் தள்ளின. 1968களில் இவர் மிகவும் புகழுடன் வாழ்ந்த காலத்தில் துருக்கிய மாணவர் எழுச்சிக்கு ஆதரவு தந்தமையால் சிறைவாசம் இவரைத் தேடி வந்தது. நீதிமன்ற விசாரணைகளிலும் இதயசுத்தியோடு தான் ஆதரவளித்தமைக்கான அரசியல் நியாயத்தை எடுத்துரைத்தாரே அன்றிச் சரணாகதியடைய விரும்பவில்லை. இதற்கான தண்டனைக் காலத்திலே சிறையிலிருந்தபடியே மிகப் புகழ்பெற்ற தனது திரைப்படங்களை இயக்கினார். துருக்கியின் ஆளும் வர்க்கத்தால் தடை செய்யப்பட்ட அத் திரைப்படங்களதான் இவருக்கு பல சர்வதேச விருதுகளையும், இறவாப்புகழையும் தேடித்தந்தன.]*

எனது பிறப்பிடம் ஒரு குர்திஷ் கிராமம். என் பெற்றோர் விவசாயத்தையே தொழிலாகக் கொண்ட ஏழைகளாக இருந்தனர். ஆதலால் அடிப்படையில் பூர்ஷ்வாக் கண்ணோட்டமான விவசாயக் கண்ணோட்டத்தைக் கொண்ட கிராமியச் சூழலுக்குள்ளேயே நான் வளர்ந்தேன். ஆனால் எனது தேசம் ஒடுக்குமுறைத் தீக்குள் வெந்துகொண்டிருந்தது. ஒடுக்கப்பட்ட குர்திஷ் தேசத்தின் எண்ணிலடங்கா ஏழை விவசாயிகளோடு வாழ்ந்தமையால் எனது சிறகுகள் வலுப்பெற்றன. நானும் பறக்க விரும்பினேன். எனது தேடல் தொடங்கியது. எனது தேடலின் வடிவத்தையோ, பெயரையோ அல்லது இதுதான் எனது தேடல் என்றோ நான் அறிந்திருக்கவில்லை. 1950களின் தொடக்கத்திலே இலக்கிய ஈடுபாடுள்ள சிலரைச் சந்திக்கமுடிந்தது. அவர்களூடாக துருக்கியின் கம்யூனிஸ்ட் கவிஞரான நசீம் இக்மத்தின் கவிதைகளைப் பற்றிக் கேள்வியுற்றேன். பெரும்பாலும் அக்கவிதைகள் ஸ்பானிய உள்நாட்டு யுத்தகாலகட்டத்தில் எழுந்தவையாகும். 1952களிலே துருக்கியில் கம்யூனிஸ்ட்டுகளுக் கெதிரான அழித்தொழிப்பு நடவடிக்கைகள் கட்டவிழ்த்து விடப்பட்டபோது இன்னும் சிலரைச் சந்திக்க நேர்ந்தது.

நான் சந்தித்தவர்களனைவருமே அன்றைய அரசின் கண்ணோட்டத்தில் சட்டத்திற்குப் புறம்பானவர்கள். இவர்களில் யாருமே இயக்கவியல் பொருள்முதல்வாதம் பற்றியோ, மாக்ஸிய லெனினியம் பற்றியோ பேசவில்லை. சொல்லப்போனால் விஞ்ஞான சோஷலிசத்தைப்பற்றிய எதனையுமே நான் இவர்களூடாக அறியவில்லை. ஆனால் இவர்களது இலக்கியங்கள் துன்பமும் ஒடுக்குமுறையும் நிறைந்திருந்த வாழ்வுக்கெதிரான போரை அறைகூவியது. போரை எவ்விதம் நடத்துவது என்பதிலேயே இவர்களது தோல்வி இணைந்திருந்தது.

இவர்களூடான தாக்கத்தினாலேயே நான் சிறுகதைகள் எழுதவாரம்பித்தேன். அச் சிறுகதைகளே என்னை அரசியல் பொலீஸ் புலிகளுக்கு அறிமுகப்படுத்தின. 1955ம் ஆண்டிலே உணர்ச்சிகளின் குவியலான சிறுகதைபோன்ற ஒன்றை எழுதினேன். இதன் காரணமாக என்னை நீதிமன்றுக்கு அழைத்தார்கள். கம்யூனிஸப் பிரசாரகன் என்று குற்றஞ்சாட்டப்பட்டேன். இதிலே வேடிக்கை யாதெனில் நான் அப்போதும் பள்ளிசெல்லும் பையனாக இருந்தேன். நிறையநாள் கோட்டுக்கும் வீட்டுக்குமாக அலைக்கழிக்கப்பட்டேன். இறுதியில் 1961ம் ஆண்டிலே எனக்கு இரண்டரை வருடச் சிறைத்தண்டனை வழங்கினார்கள். மேற்குறித்த விசாரணைகள் நடந்து கொண்டிருந்தபோது நான் எனது நகரத்தைவிட்டு விலக நேர்ந்தது. எனது புத்திளம் பொழுதையும் மாணவ வாழ்வையும் அநுபவிக்க உதவிய எனதரும் 'அடானா'வை விட்டு நான் கம்யூனிஸ்ட்டுகளைத் தேடி இஸ்தான்புல் சென்றேன். இக் காலகட்டத்திலும் எனக்கு கம்யூனிசமென்றால் என்னவென்று தெரிந்திருக்கவில்லை. ஆனால் மக்கள் என்னை அவ்வாறு அழைக்கவே விரும்பினர்.

இஸ்தான்புல்லிலே நான் மிகவும் ஏமாற்றமடைந்தேன். கம்யூனிஸ்ட்டுகள் என்று நான் சந்தித்த அனைவருமே என்னை ஏமாற்றத்துக்குள்ளாக்கினர். எனது அன்றைய ஏமாற்றத்தை இன்று எப்படிப் புரியவைப்பது? ஆக 61ம் ஆண்டிலிருந்து 63வரை சிறைகளிலும் சிலநாள் வெளியுலகிலுமாகக் கழிந்துபோனது.

1963 முதல் எனது வாழ்வில் ஒரு புதிய காலகட்டம் ஆரம்பித்தது. நான் திரைப்படங்களில் நடிக்க ஆரம்பித்தேன். 1965களிலே எனது உழைப்பின் பலன் எனக்குக் கிட்டியது. தேசத்தின் பிரபல்யமான நடிகர்களிலொருவராக நான் அறிந்து கொள்ளப்பட்டேன். அதற்காக நான் நடித்த படங்களெல்லாம் புரட்சிகர ஜனநாயகம் பற்றிப் பேசியதென்று நான் உரிமை கோரவில்லை. ஆனால் எல்லாப் படங்களுமே பிரபல்யம் பெற்றவை. அவை ஒடுக்குமுறைகளுக்குள் நெரிபட்ட மக்களின் மக்களின் வாழ்வின் அவலங்களைப் பிரதிபலித்தன. அரசியல்



படிப்பகம்

www.padippakam.com

ரீதியாகப் பார்க்கப்போனால் சித்தாந்த ரீதியிலான தவறுகள் இருந்தன. சில திரைப்படங்கள் சீர்திருத்தவாதத்தை முன்னிறுத்தின. பிற சில அராஜகவாதத்தையும் காடைத்தனங்களையும் பிரதிபலித்தன. இவற்றினூடான அநுபவங்கள் எனக்கும் மக்களுக்குமான உறவைப் பேணவும் மிகவும் நெருக்கமானதாக்கவும் உதவின.

1965–66ம் ஆண்டளவில் மேற்குறித்த கதாநாயக வாழ்விலே நான் சலிப்புற்றேன். அதனாற் திரைப்படங்களைத் தெரிவுசெய்து நடிக்கத் தொடங்கினேன். இதனால் பிரச்சனை ஒன்றும் தீர்ந்துபோய் விடவில்லை. மீண்டும் பணத்துக்காக மோசமான படங்களில் நடித்தே ஆகவேண்டியிருந்தது. ஆதலால் 1966களின் பின்னால் கமெராவின் பின்னாலேயே இருக்கத் தீர்மானித்தேன்.

1968ம் ஆண்டிலே எனது முதல் படத்தயாரிப்பு முயற்சி நடந்தது. அந்த ஆண்டிலேயே எனது இரண்டாண்டுகால இராணுவ சேவைக்கும் சென்றேன். இக் காலகட்டத்தில்தான் எனது வாழ்வை ஒழுங்குமுறைகளுக்குள் அமைக்கப் பழகிக்கொண்டேன். எனது படிப்பை ஒழுங்குபடுத்திக் கொள்ளமுடிந்தது. மார்க்ஸ், லெனின், மாவோ போன்றோரது அரசியல் இலக்கியங்கள் எனக்கு அறிமுகமாகின. இராணுவ சேவையிலிருந்து விலகியபின்பு எனது முதலாவது முக்கியமான படத்தை தயாரித்தேன். நம்பிக்கை (The Hope) என்ற அப்படத்தைத் தயாரித்தபோதும் தயாரிப்புச் செலவுகட்காக மீண்டும் மசாலாக் கதாநாயகனாக நடிக்க வேண்டி நேர்ந்தது.

சமகாலத்தில் எனது அரசியல் தேடல் என்னைப் பல்வேறு இயக்கங்களோடு தொடர்புகொள்ள வைத்தது. எனக்கென்று தெளிவான ஓர் அரசியல் முடிவு இருக்கவில்லை. ஆதலால் மாணவர் இயக்கங்களோடும் தொடர்பு வைத்திருந்தேன். தொழிலாளர் இயக்கங்களோடும் தொடர்பு கொண்டிருந்தேன். அவர்கள் பிற்போக்குவாதிகட்கு விரோதமாகச் செயற்பட்டமையால் அவர்கள் அனைவருக்கும் ஆதரவாளனாக இருந்தேன். இதன் காரணமாக 72ல் மறுபடியும் நான் சிறை செல்ல நேர்ந்தது. எனது வாழ்வின் மிக முக்கியமான திருப்பம் இச் சிறைவாசத்திற்றான் நடந்தது. மாக்சிய-லெனினியத்தை முடிந்தவரை கற்றுக்கொண்டேன். திரிபுவாதிகளையும், சோவியத் யூனியன என்ற சமூக ஏகாதிபத்தியத்தையும் என்னால் அடையாளங் காணமுடிந்தது. குட்டி பூஷ்வா போக்குகள் பற்றியும், கதாநாயக சூரத்தனங்களின் விளைவுகள் பற்றியும் ஆழமாக அறிந்து கொண்டேன். இவற்றினூடான அறிவினால் என்னுள்ளே சினிமா பற்றிய தெளிவான கோட்பாடொன்று உருவாகியது.

1974ம் ஆண்டில் சிறையிலிருந்து விடுதலையாகியதும் ஒரு சினிமாத் தயாரிப்பாளனென்ற வகையில் மிகத் தைரியமான முடிவுகளோடு 'நண்பன்' (The Friend) என்ற படத்தைத் தயாரித்தேன். மீண்டும் இரண்டாவது படத்தயாரிப்புக் காலகட்டத்தில் சிறைக்குள் தள்ளப்பட்டேன்.

1974-81க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் சிறைக்குள்ளிருந்தபடியே எழுதவாரம்பித்தேன். இலக்கிய ஆக்கங்களோடு நின்றுவிடாது அரசியல் கட்டுரைகளும் இக்காலகட்டத்தில் என்னால் எழுதப்பட்டன. ஐந்து திரைப்படங்களைத் தயாரித்து முடித்தேன். முதலிரண்டும் வெற்றிபெறவில்லை. ஆனால் பின்னைய மூன்றும் எனக்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தன. 'The Herd' (மந்தை), 'The Enemy' (எதிரி), 'YOL' ஆகியவையே அத்திரைப்படங்களாகும். கடைசித் திரைப்படமான YOL இல் நான் மிகுந்த ஈடுபாட்டோடு பணியாற்றினேன். அதன் படத்தொகுப்பு வேலைகளையும் நானே செய்து முடித்தேன். இந்தச் சிறைவாச நாட்களிலே முன்பிருந்ததை விடவும் எனது ஆளுமை செழுமை பெற்றுள்ளது. வித்தியாசமாகவும் அதேசமயம் தெளிவாகவும் எனது திரைப்படங்களில் எனது மண்ணின் குரல் எதிரொலிக்கிறது. ஆத்மார்த்த ஈடுபாட்டோடு ஒரு மக்கள் கலைஞனுக்கான பணியை என்னால் முன்னெடுக்க முடியுமென்று நான் நம்புகிறேன்.

*[அமெரிக்க கம்யூனிஸ்டுக் கட்சியின் அதிகாரபூர்வ நாளேட்டிலே வெளியான யில்மஸ் குனேயுடனான ஒரு பேட்டியிலிருந்து தொகுக்கப்பட்டது.]*





படிப்பகம்

www.padippakam.com

## கியூபா: கருணையினாலல்ல

கியூபாவுக்குள் ஆயுதங்கள் வெடிமருந்துகள் சகிதம் புகுந்த மூவர் சென்ற வருட இறுதியில் கைது செய்யப்பட்டனர். இவர்கள் கியூபாவிலிருந்து வெளியேறி வெகுகாலமாக அமெரிக்காவின் ப்ளொறிடா அரசில் உள்ள மயாமி நகரில் வாழ்வோர். கியூபா ஆட்சியைக் கவிழ்க்கும் முனைப்புடன் செயற்படும் சி.ஐ.ஏ. ஆதரவுடைய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களைக் கைது செய்ததன் மூலம் கியூபாவில் இவர்களது உதவியாளர் ஒருவரை கியூபா அடையாளங் காண முடிந்தது. இவருக்கும் மயாமியிலிருந்து சென்ற இருவருக்கும் கியூபா நீதிமன்றம் மரணதண்டனை விதித்தது. உடனேயே, அமெரிக்க அரச செயலாளர் ஜேம்ஸ் பேக்கர், அவர்களை மன்னிக்குமாறு குடியரசின் தலைவர் பிடெல் கஸ்ட்ரோவுக்கு வேண்டுகோள் விடுத்தார். அவர் மட்டுமன்றி ஸ்பானிய அரசும் கொலம்பியாவும் அதேவிதமான வேண்டுகோளை விடுத்தன. கியூபா பிரஜையின் தண்டனை நிறைவேற்றப்பட்டது. மற்றோர் அமெரிக்கப் பிரஜைகளாதலால் தண்டனை உடனடியாக நிறைவேற்றப்படவில்லை.

## அல்ஜீரியா: இதுவன்றோ ஜனநாயகம்!

1989இல் அல்ஜீரியாவில் விலைவாசி ஏற்றத்தை அடுத்து ஏற்பட்ட கலவரங்கள் அங்கு புதிய அரசியற் சூழலை உருவாக்கின. 1962இல் அல்ஜீரிய விடுதலை முதலாக ஆட்சியில் இருந்து வந்த தேசிய விடுதலை முன்னணி ஆட்சி பலவீனமடைந்தது. அதன் விளைவாக இஸ்லாமிய இரட்சணிய முன்னணி ஒரு வலிய அரசியற் சக்தியாக வளர்ந்தது. பலகட்சி ஜனநாயக அடிப்படையில் இவ்வருட முற்பகுதியில் நடந்த தேர்தலில் இம் முன்னணி அதிகாரத்தைக் கைப்பற்றும் என்பது தேர்தலின் முதலாவது கட்ட இறுதியிற் தெளிவானது. இவர்களது வெற்றிக்கு இடதுசாரிகட்கும் மதசார்பற்ற ஜனநாயக சக்திகட்கும் மத்தியில் போதிய ஒற்றுமை இல்லாமை காரணமானது எனினும் தேர்தலின் நியாயமான முடிவை ஏற்க அனைவரும் தயாராக இருந்தனர். ஆயினும் இராணுவத் தலையீட்டின் விளைவாக ஒரு அரசியலமைப்பு நெருக்கடி தோற்றுவிக்கப்பட்டது. இஸ்லாமிய இரட்சணிய முன்னணி ஒரு தீவிரவாத முஸ்லிம் இயக்கம் என்ற கருத்துப் பரவலாக நிலவுகிறது. அவர்கள் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் என்பதனால் அவர்களது வெற்றி பிற நாடுகளில் உள்ள இஸ்லாமிய அடிப்படைவாதிகட்கு உற்சாகம் அளிக்குமென்று மேலை நாடுகளிலும் அவற்றுக்குச் சார்பான அரபு நாடுகளிலும் அஞ்சப்பட்டது. எனவே இந்த ஜனநாயக விரோத நடவடிக்கை பற்றி உலகின் ஜனநாயகத்தின் பாதுகாவலர்களின் பாசறைகளிலிருந்து ஒரு குரலும் எழவில்லை. இதன் விளைவாக இஸ்லாமிய அடிப்படைவாதிகள் பிற அரபு நாடுகளின் முக்கிய ஏகாதிபத்திய விரோத அரசியற் சக்தியாக வளருவர் என்பதையும் பாராளுமன்றத்திற்கு வெளியிலேயே அந்த அரசியல் வளரும் என்பதையும் இந்த ஜனநாயக விரோத இழிசெயலை வரவேற்போர் விரைவில் உணர்வார்கள்.

## மூன்றாம் உலகம்: முதலாளித்துவத்தின் மலசலகூடம்.

உலக வங்கியின் பிரதம பொருளியலாளரும் அமெரிக்காவின் ஜனநாயகக் கட்சியின் முன்னாள் ஆலோசகருமான லோறன்ஸ் ஸமேர்ஸ் அனுப்பியுள்ள அகச்சுற்றுநிருபமொன்றில் ஆபிரிக்காவின் சனத்தொகை குறைந்த நாடுகள் குறைவாக மாசுபட்டுள்ளன எனவும் துப்புரவான சுற்றாடல் மீதான விருப்பம் வருமானத்துடன் தொடர்புடையது எனவும் குறிப்பிட்டுள்ளார். குறை ஊதியமுள்ள நாடுகளில் நச்சுத்தன்மையுடைய கழிவுப்பொருட்களைக் கொட்டுவதன் பொருளியல் ரீதியான வாதம் பிழையற்றது. அதை நாம் தட்டிக்கழிக்க முடியாது எனவும் குறிப்பிட்டார். மாசுபடலின் பெரும்பகுதி மின் உற்பத்தி, போக்குவரத்து ஆகிய வர்த்தகம் செய்யமுடியாத தொழில்களால் ஏற்படுவதும் திண்மக்கழிவுகளைக் கொண்டு செல்லும் செலவு அதிகமாக இருப்பதும் வருத்தத்துக்குரியது எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்தச் சுற்று நிருபம் ஒரு பத்திரிகையிற் பிரசுரமானதையடுத்து, அது விவாதம் ஒன்றைக் கிளறிவிடுமுகமாக எழுதப்பட்டதே அல்லாமல் கொள்கையாக எழுதப்படவில்லை என்று உலகவங்கி விளக்கம் அளித்துள்ளது. (ஆதாரம் The Independent 7.2.92).

இது உண்மையோ பொய்யோ, தனது முலதனத்தைக்கொண்ட கனரகத் தொழில்கள் மூன்றாமுலகில் பெருகுவதை மேலை முதலாளித்துவம் இன்று ஊக்குவிப்பதும் கழிவுப் பொருட்களை மூன்றாமுலக நாடுகளிற் கொட்ட அனுப்புவதும் நாம் அறிந்த உண்மைகள். அதிக கூலிக்கான வேண்டுதல்கள், மூலவளங்களின் தட்டுப்பாடு போன்ற பிரச்சனைகளைத் தீர்ப்பதில் மூன்றாமுலக நாடுகளைப் பயன்படுத்திய மேலை முதலாளித்துவம் தனது சுற்றாடலின் பிரச்சனையையும் மூன்றாமுலகின் தலையிற் சுமத்த முனைவது முற்றிலும் உண்மை.

# ஓநாய்களின் கண்ணீர் மழை

-ஜெ-

பனாமாவிலும் ஈராக்கிலும் அதற்குமுன் லிபியாவிலும் அண்மையிற் படுகொலைகளைச் செய்யத் தயங்காத அமெரிக்க அரசின் இரக்கத்தின் அடிப்படை என்ன? கியூபாவுக்குள் ஆயுதங்களுடன் நுழைந்தோர் குருவி சுடப் போனார்களா? கியூபா அரசை நினைத்தளவு எளிதாக அசைக்க முடியாது என்பதால் ஏகாதிபத்தியவாதிகள் கொஞ்சம் அவசரப் படுகிறார்கள். மல்லாந்து துப்பினால் மார்மேலே விழும் என்பதுபோல் அவர்களது அவசர நடவடிக்கை அவர்களுக்கே வினையாகிவிட்டது. கியூபா அரசின் செல்வாக்கு, பொருளாதார நெருக்கடியையும் மீறி, அமெரிக்கத் தலையீட்டால் அதிகரித்துள்ளது.

## இலங்கை: கடன் வழங்க நிபந்தனைகள்

உலக வங்கி இலங்கைக்குச் சர்வதேச கடனுதவி நிறுவனங்கள் மேலும் கடன் வழங்குவதற்கு ஆட்சேபனைகளை எழுப்பியுள்ளது. இலங்கை அரசின் மனிதவுரிமை மீறல்கள் காரணமென்று யாரும் நினைத்தால் அது உலக வங்கியின் தகுதியை அவமதிப்பதாகும். இலங்கை அரசாங்கம் நாட்டின் வங்கிகளைத் தனியாருடமையாக்கியது போதாது என்பதே உலக வங்கியின் ஆட்சேபனைக்குக் காரணம்.



படிப்பகம்

www.padippakam.com

## ஈழத்துக் கவிஞர்கள் அறிமுகம்:

# அ.யேசுராசா

யேசுராசா அவர்கள் தமது 'அறியப்படாதவர்கள் நினைவாக' கவிதைத் தொகுதியை எண்பதுக்ளின் முற்பகுதியில் வெளியிட்டார். அத்தொகுதியில் முன்னுரையோ அணிந்துரையோ இல்லை. எனவே கவிதை பற்றி யேசுராசாவின் கருத்துக்களையோ அவரது ஆக்கங்கள் பற்றிப் பிறரொருவரது மதிப்பீட்டையோ நம்மால் வழங்கமுடியவில்லை. 1946இல் குருநகரிற் பிறந்த யேசுராசா அஞ்சலதிபர்-தந்தியாளர் சேவையிற் பணியாற்றிப் பதவியினின்று ஓய்வுபெற்றுள்ளார். 1968 முதல் எழுத்துத் துறையில் ஈடுபட்டுள்ள யேசுராசாவின் சிறுகதைத் தொகுதியான 'தொலைவும் இருப்பும்' 1974இல் பிரசுரமானது. இத் தொகுதிக்கு சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. யேசுராசா யாழ் திரைப்பட வட்டத்தின் ஒரு அமைப்பாளராகவும் இருந்தார். 1975 முதல் வெளிவந்து தற்போது தடைப்பட்டுள்ள 'அலை' சஞ்சிகையின் இணையாசிரியர் என்ற வகையிலேயே ஈழத்துத் தமிழ் இலக்கியவுலகம் அவரை அதிகம் அறிந்துள்ளது. அவரது ஆரம்பகால எழுத்துக்களில் மார்க்ஸிய அனுதாபமான முனைப்புகள் தென்பட்டாலும் அவர் எந்த இடதுசாரி இயக்கத்திலும் இணைந்து செயற்பட்டதாக நாம் அறியோம். காலப்போக்கில் இன ஒடுக்கலின் விருத்தியுடன் அவரதும் அவர் சம்பந்தப்பட்ட 'அலை'யினதும் நிலைப்பாடுகள் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவானதாக அமைந்தன.

யேசுராசாவின் கவிதைகளில் தனிமனித உணர்வினதும் அனுபவங்களினதும் வெளிப்பாடு சிறப்பானது எனலாம். கலைஞனது தனிமனிதத் தன்மையின் முக்கியத்துவத்தையும் கலை, அரசியற் சித்தாந்தக் கட்டுக்கோப்புக்கு அப்பாற்பட்டிருக்க வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தி வந்துள்ளார். அவரது கவிதைகள் சில 'பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்' தொகுதியிலும் 'மரணத்துள் வாழ்வோம்' தொகுதியிலும் பிரசுரமாயின. அவை தவிர்ந்த சில கவிதைகளை உங்கள் பார்வைக்கு வைக்கிறோம். நேருக்குநேராகவே பேசும் அப் படைப்புக்கள் யேசுராசாவின் கவிதைகள் பற்றி உங்களுக்குப் போதியன சொல்வன என்பதால் நாம் ஒதுங்கிக் கொள்கிறோம்.

### கடவுளுக்கு...!

மூடிக் கிடக்கின்ற
சொர்க்கத்தின் கதவுகளைத்
திறந்துவிட்டால்...,
மண்ணின் குரலுமக்குக்
கேட்கக் கூடும்!
கீழிறங்கி,
புழுதி மண்ணின்மேல்
நடந்துவந்தால்,
மானிடத்தின்-
எழுச்சிகளை வீழ்ச்சிகளை
முற்று முழுதாக
நீரறிதல் கூடும் - கூட
நீர்... வருவீரா?

### வா

எரிகின்ற-
குறுமெழுகு வரிசை
ஒளி நிழலில்,
ஒப்பாரிக் குரல் கேட்டு
இந்தப் பெட்டிக்குள்
நீயேன் கிடக்கின்றாய்?
முகம் மூடும்,
துப்பட்டி நீக்கி-
எழுந்துவிடு!;
என்கூட வந்துவிடு!

### ரூவான் வெலிசய

வெளியை நிறைத்த
வெண்குவி வளைவு;
வானந் தடவுகிற
சுருள்முடி.

நீலத் திரைவானம்
இடையிடையே ஓடும், சிலமேகம்

அடிவயிற் றெழுமோர்
நீண்ட பரவசம்;
தீடீரென,
மானிடத்தின் பிரமாண்டம்.



படிப்பகம்

www.padippakam.com

## கவடுகளைத் தொடருதல்...

தோழா வா!
இந்த வழியால்தான்
நம்முடைய தோழர் முன் நடந்து, போனார்கள்.
ஓங்கி இரைகின்ற
காற்றில் அலையில்,
அவருடை மூச்சும்
கலந்து உளதே!;
கீழ், மேல் வானில் தெரிந்திடு சிவப்பில்
அவருடைக் குருதியும் படிந்தே உளது.

'ஏகாதிபத்தியம், முதலாளித்துவம்
நிலப்பிரபுத்துவம்'

மக்களைப் பிணித்த இம்
முப்பெரும் விலங்குகள்,
பொடிபடுமாறு பொடிபடுமாறு...

லாவோசில், வியத் நாமில்:
அங்கோலாவில் மத்திய கிழக்கில்
இன்னும் இன்னும்...,
ஐந்து கண்டமும்
பரந்துள தோழர் புரிந்திடு போர்கள்
இன்னும் இன்னும், தொடர்ந்தே வந்துள.

சாண்டல்க வில்லாப் புதிய பூமியில்
சுதந்திரத்தின் கதகதப்பான,
மூச்சுக் காற்றினை முகரும் முனைப்பில்
தங்கள் குருதியைச் சதையினை உயிரினை,
எம்முடைத் தோழர் இழந்து போயினர்.

'ஜூலியஸ் பூசிக், நகுயென் வான்டிராய்
சாரு மஜூம்தார், யான்சிகா' எனவும்

இன்னும்... இன்னும்...
போறியாத எம்முடைத் தோழர்,
தங்கள் குருதியைச்
சதையினை எலும்பினை,
உயிரினை எல்லாம் இழந்தே போயினர்.

அவருடைக் குருதி படிந்துள சிவப்புக்
கொடியும் நாலடித் தடங்கள் பதிந்த.
பாதையும் முன்னால்
விரிந்தே உள்ளன.

இன்னும் முடியா அவருடைப் பணியினை
இன்னும் இன்னும், தொடருதல் செய்வோம்...!

தோழா வா!
இந்த வழியில்தான்
அவருடைக் குருதி படிந்துள கொடியொடும்
நாம்,
நடந்து செல்வோம்!

## சங்கம் புழைக்கும்... மாயா கோவ்ஸ்கிக்கும்...!

சங்கம் புழை!
உன்நெஞ்சைமுட்கள் கிழித்த கதையறிவேன்
"குளிர்ந்துபோன என் நிராசை நித்தமும்
முடுபனியாக, உன் வீதியிற்படரும்"
என்றபடி துயரில் நீசெத்துப் போவாய்
உயிர்தின்றது உன் காதல்.

"...நொறுங்கியது காதற் படகு
வாழ்வும் நானும் பிரிந்தனம்...."
ஓ! மாயாகோவ்ஸ்கி,
துயரினிலாழ்ந்தாய்;
குண்டுகளால் அதை வெல்லப்பார்த்தாய்.

காதலின் வசீகரக்
கடுமைதாக்க
நானும் உம்போல மனமிழந்த கவிஞன்தான்
இந்தவண்ணமெல்லாம்
நமக்கேன் நிகழ்கிறது?
மெல்லிதயங்கொண்டிருந்தோம் என்பதாலா?

முதிரா இளைஞர் செயலென்று
உம்மையெலாம்
என்னுவார் அணி சேரேன்:
என்றாலும்,
உமது வழி தொடரேன்
செய்வதற்கு இன்னும்
பணிகள் மிகஉளதே!
செயலற்று வாழ்வில் ஒதுங்கமுடியாது;
'பிறத்தியானெல்லாம்
உள் நுழையுங் காலம்!'

முள்முடி குத்தும்
சிலுவை உறுத்தும்தான், என்றாலும்
சாவு வரை வாழ்வேன்!
சாவுக்கு அப்பாலும்
என் செயலிற் கவியில்
உயிர்த்தெழுவேன்;
உயிர்த்தே எழுவேன்!

## நிச்சயமின்மை

நேற்று
அங்கும் இங்கும் பலர்
கொண்டுசெல்லப் பட்டனர்;
உனக்கும் எனக்குங்கூட
இதுபோல் நிகழலாம்.
திரும்பி வருவோமா?
மறுபடியும் நாளை
சூரியனைக்காண்போமா?
ஒன்றும் நிச்சயமில்லை,
எமதிருப்பு
'அவர்களின்' விருப்பில்.



படிப்பகம்

www.padippakam.com

பின்விளைவுகள் கருதியோ, போராட்டத்திற்குக் குந்தகம் விளைவிக்கும் நிலைமைகளைக் கணக்கிலெடுத்தோ இக்கொலைபற்றி விமர்சிக்கப்படலாமேயொழிய,அதற்கு மேலாக எதிரியின் மீதான பாசம் என்பது கட்டுரையாளரின் வர்க்க அடிப்படையையும், போர்த்திய தோல்களையும் கிழித்துக் காட்டுவதாக அமையும்.

இவண்
சக்தி
மொன்றியல், கனடா.

## ஆசிரியர் குழுவின் பதில்:

கார்க்குண்டுகளின் கோரத்தை வடஅயர்லாந்தும் அதைவிட உக்கிரமமாக 'பெய்ரூத்' நகரும் கண்டுள்ளன. கொழும்பிற் கார்க்குண்டு யாரை எப்படிப் பாதித்தது என்றெல்லாம் அறிந்தே அது கோரச்செயல் என்றோம். பலாபலன்கள் பற்றிய தீர்க்கமான பார்வையின்றி மேற்கொள்ளப்படும் ஆயுதஅரசியல் புரட்சிகரமானதல்ல என்பது நமது மதிப்பீடு. அனந்தன் கட்டுரைக்கு அவரே பொறுப்பு.

பனிமலர் ஆசிரியக்குழு

## அனந்தன் பதில்:

ராஜீவ் கொலை அரசியல் அநாகரிகம் என்றும் அதைக் கண்டிக்கத் தவறியமை விடுதலைப் புலிகளின் அரசியலின் இழிவின் அடையாளம் என்றும் எழுதினேன். தனிமனிதர்மீது இத்தகைய தண்டனைகளை விதிக்கும் அதிகாரம் மக்கள் மன்றத்தினதாக இருக்கலாம். ஒருசில தனி மனிதர் இத்தகைய நடவடிக்கைகளை முடிவுசெய்து நடைமுறைப்படுத்துவது தவறு என்பது எனது மதிப்பீடு. இத்தகைய செயல்களைக் கண்டிக்கத் தவறுவோமாயின் ஒவ்வொரு கொலைக்கும் ஏதோவொரு தத்துவார்த்த நியாயமும், தார்மீக விளக்கமும் போதுமானதாகிவிடும். என்னுடைய 'வர்க்கஅடிப்படை' பற்றியும் நான் 'போர்த்திய தோல்கள்' பற்றியும் நான் சொல்லக்கூடியது: காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்.

இந்தியப் புரட்சிகரக் குழுக்கள் பல மக்களிடமிருந்து தனிமைப் பட்டுள்ளன. யார் எதிரி என்ற தெளிவு பல தலைமைகளிடம் இல்லை. ஸ்லோகங்கள் அரசியற் குழப்பத்துக்கு மாற்று மருந்தில்லை, எதிராளிகளின் படுகொலைகள் வர்க்கஉணர்வின் அளவுகோலுமில்லை. ராஜீவ் கொலை இன்று விடுதலைப் போராட்டத்துக்கு எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது? ராஜீவ் கொலையைச் செய்தோர் அதை ஏன் செய்தார்கள்? அச்செயலை நாம் நியாயப்படுத்தாவிட்டால் கண்டிக்கவேண்டும். வருந்துவதும் கண்டிப்பதும் வெவ்வேறு விஷயங்கள்.

புரட்சி யுத்தம் கொடூரமும் அவலமும் உடையதாகையால், கொடூரமும் அவலமும் புரட்சி யுத்தமாகி விடுமா? வழிப்போக்கன் ராஜீவ் கொலைக்குக் கண்ணீர் விடவில்லை, அதைக் கைகொட்டி வரவேற்கவுமில்லை. அதன் அரசியற் பாதிப்புக்களை அவர் அறிவார் என்றே தெரிகிறது.

தனிமனிதர் கொலைபற்றிய எனது கருத்துக்களைக் கட்டுரையில் எழுதியதற்கும் அதிகமாக விரிவுபடுத்தும் அவசியம் இப்போதைக்கு இல்லை என்றே நினைக்கிறேன்.

அனந்தன்

## விடுதலையும் மனித உரிமையும்.

கேசவன் கடத்தப்பட்டு விளக்கமின்றி மறியலில் வைக்கப்பட்டதைப் பல ஐரோப்பியத் தமிழேடுகளுங் கண்டித்தன. அக் கண்டனங்கள் ஓயுமுன்பே செல்வி, தில்லைநாதன் உட்படப் பதினொருவர் காணாமற் போயினர். இப்போது முன்னாள் கம்யூனிஸட் கட்சி (மா-லெ) உறுப்பினரும் யாழ் புத்தகநிலைய முகாமையாளருமான திரு மணியம் கடத்தப் பட்டுள்ளார்.

கடத்தப்பட்ட இவர்கள் எவருமே விடுதலைப் போராட்டத்தின் விரோதிகளல்லர். நெருக்கடியான சூழ்நிலையிலும் தமது மண்ணைவிட்டு அகலாத நெஞ்சுறுதியுடையவர்கள். அவர்கள் என்ன தவறு செய்தார்கள் என்பதை மக்களுக்கு விளக்கும் பொறுப்பு விடுதலைப் புலிகட்கு உண்டு. யாழ்க் குடாநாட்டில் ஒரு அரசாங்கம் போற் செயற்படும் விடுதலைப் புலிகள் இந்தப் பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது. வடக்கில் நாலாயிரத்திற்கும் அதிகமானோர் மறியலில் உள்ளனர் எனப்படுகிறது. அவர்களது மனித உரிமைகளை விடுதலைப் போராட்டத்தின் பேரால் மறுக்கமுடியாது. எவரேனும் மக்கள் விரோதியோ தேசத் துரோகியோ என்று குற்றஞ்சாட்டப் படுவாராயின், அக் குற்றச்சாட்டைத் தேசமும் மக்களும் அறியட்டும். முறையான விசாரணையை நடத்தித் தீர்ப்பை மக்கள் மன்றமே வழங்கட்டும். கொலைகளும் ஆட்கடத்தல்களும் விடுதலைப் புலிகளையும் தமிழர் விடுதலைப் போராட்டத்தையும் பலவீனப்படுத்துவன. இச் செயல்களுக்குப் பொறுப்பானவர்கள் இதை உணர்வது நல்லது.



படிப்பகம்

www.padippakam.com

## இருப்பிடம் தேடி.....

நிலவு எப்போது
எழும் போகும்.
எச்சில் கோப்பைகள்
விழிகளில் சுழலும்.
ஆரவம் அடங்கி
இயந்திரமும் உறங்கி
மயானமாய் நகரம்.

வந்தது தொலைவா?
செல்வது தொலைவா?
தரிப்பிடமெல்லாம்
இருப்பிடமானால்....
திசை எட்டும் சாலைகள்
பிரியும் நீளும்
போக்கிடம் எது?

ஆங்காங்காய்
எலிவளைகள்
குறுக்கும் மறுக்குமாய்
எ:கு அட்டைகள்
விரைந்தூரும்.
மனிதரைக் காவும்
நிறக் குருடாக.

முட்டை பிரிந்து
கொட்டுண்டு சிதறும்
வெங்காயங்கள்.
உரித்து பிரித்து
தேடியது எதனை?
வியர்வை நாற்றம்
கண்களை எரிக்கும்.

குறுக்குக்கட்டும்
நார்க்கடகமும்
சமந்தோரெல்லாம்
இழிந்தவரானால்....
என்னவர் அகங்கள்
தாமிங்கும் அளக்கும்
கறுப்பினை இகழும்.

காலணிகளில் முகங்கள்
நசுங்கும் சிதையும்
அதனால் என்ன?
ஐரோப்பிய காலன்றோ!
மோதிரக் கையன்றோ!
தோத்திரங்கள் சொல்வோம்
Thanks, Merci, Danke....

கனவுகள் காயமான
மனிதரைப்போல
இலைகளை உதிர்த்து
உள்ளுக்குள் உயிர்த்து
மரங்கள் வெறிக்கும்
இருப்பிடம் தொலைத்த
எனக்காய் இரங்கும்.

மலர்கள் தூவிய
பீடங்கள் ஒவ்வொன்றிலும்
கூர்வாள் உயர்த்திய
வீரரைத் தாங்கும்
பாயும் புரவிகள்
தேசங்கள் வென்றவர்
சிலையிலும் முறைப்புடன்

தீப்பற்றும் குரல்களால்
செவிகளில் அறைவர்
"வெளியேறு..."
சிலைகள் உயிர்க்கும்
வாள்முனை மினுங்கும்
தாயகம் துறந்தவனே
உனக்கு எது இருப்பிடம்?....

கி.பி.அரவிந்தன்
இலையுதிர்காலம் 1991,
பாரிஸ்.



## சத்தியஜித் ராய்

*தலைசிறந்த சர்வதேச திரைப்பட நெறியாளர்களுள் ஒருவரான சத்தியஜித் ராய் அண்மையில் கல்கத்தாவில் காலமானார். இந்த திரைப்பட மேதைக்கு பனிமலர் தனது அஞ்சலியைத் தெரிவிக்கிறது. இவர் பற்றிய விரிவான கட்டுரையொன்று அடுத்த இதழில் இடம் பெறும்.*

CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro
Denmark

PAM 2

படிப்பகம்